விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 007 வள்ளுவர் ஆண்டு 2055 மார்கழி 11 வியாழக்கிழமை (26.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## மார்கழிப் பெருவிழா




03ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சியில் கோர விபத்து; 2 வயதுக் குழந்தை உயிரிழப்பு

### மோ.சைக்கிளை மோதித் தள்ளிய டிப்பர் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இடம்பெற்ற கோர விபத்தில் 2 வயது குழந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் ஒரே

15



# வடக்கு மக்களின் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும்

## நம்பிக்கையுடன் வெளியிட்டார் ஆளுநர் வேதநாயகன்



*(வயாவிளான்)*

**இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பொது மக்கள் காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும் என வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

வயாவிளான், பலாலி தெற்கு, பலாலி கிழக்கு மக்களின் அழைப்பின் பேரில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் விடுவிக்கப்பட்ட காணிகளில் விவசாய நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடலும், பூனையன்காடு இந்து மயானத்தில் மர நடுகையும் நேற்றுப்புதன்கிழமை காலை வயாவிளா

15




## மதுபோதையில் சாரத்தியம் 251 பேர் கைது

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸாரால் அமுல்படுத்தப்பட்டுள்ள விசேட போக்குவரத்துக் கண்காணிப்பின் கீழ் கடந்த 24 மணித்தியாலங்களில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 251 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட போக்கு

15

## பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்க அரசு தீர்மானம்

### அமைச்சர் வசந்த சமரசிங்க



(கொழும்பு)

இந்த வாரம் பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடிய நிலையில், அத்தியாவசியப் பொருட்களை வழங்க அரசாங்கம் தயாராக இருப்ப

15

## எலிக்காய்ச்சல் அறிகுறி

### பருத்தித்துறையில் ஆதார வைத்தியசாலையில் இருவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் எலிக்காய்ச்சல் அறிகுறிகளுடன் நேற்று இருவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

4 நாட்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மேற்படி இருவரும் நோய் மிகவும் தீவிரமடைந்த நிலை

15

## கல்வியங்காட்டில் கார் மோதியதில் ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)


யாழ்.கல்வியங்காட்டில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த 5 பிள்ளை

15

## கழுத்தில் ஒரு பக்கம் குத்தி மறுபக்கம் வந்த கூரிய தடி

### வவுனியா வைத்தியசாலையில் வெற்றிகரமாக அகற்றம்



(வவுனியா)

வவுனியா பொது வைத்தியசாலையில் கழுத்தில் கூரியதடி ஒன்று குத்தி உயிருக்கு ஆபத்தான நிலையில் அனுமதிக்

15

## பரிசு வென்றதாக தொலைபேசி அழைப்புக்கள்

### பண்டிகைக் காலங்களில் இணையம் ஊடாகப் பண மோசடிகள்

(கொழும்பு)

பண்டிகைக் காலங்களில் இணையம்ஊடாகப்பணமோசடிச் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக இலங்கை கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

கணினி அவசர செயற்பாட்டுப் பிரிவின் பிரதம தகவல் பாது

15

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைகளைத் தகர்த்து எறிந்து தலைநிமிர்ந்து நிற்கிறது வலம்புரி

## வாழ்நாள் பேராசிரியர் சண்முகதாஸ் புகழாரம்



நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே! என்ற கொள்கையோடு எதையும் மறைக்காமல், யாருக்கும் தாழ்ந்து போகாமல் எங்களுடைய பண்பாட்டின் பின்னணியிலே பல யுக்திகளைக் கையாண்டு எழுதப்படும் வலம்புரியின் ஆசிரியர் தலையங்கம் பற்றிப் பேசாதவர்கள் எவருமில்லை. ஆசிரியர் தலையங்கம் என்றாலே வலம்புரிதான் என வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தெரிவித்தார்.

வலம்புரிப் பத்திரிகையின் 25 ஆவது ஆண்டு வெள்ளிவிழா நிகழ்வு கடந்த 20 ஆம் திகதி நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எத்தனை இடர்கள் வந்தபோதிலும் அவற்றைத் தகர்த்தெறிந்து தனக் கேயுரிய தனித்துவமான பாணியில் தலைநிமிர்ந்து நிற்கும் வலம்புரியைப் பார்த்து மகிழ்வடைகிறேன்.

எனது குடும்பத்திற்கும் வலம்புரிக்குமான உறவு மிக நெருக்கமானது. எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வலம்புரியின் பணி மிகவும் மகத்தானது. இது பாராட்டப்பட வேண்டியது. வலம்புரிப் பத்திரிகை மென்மேலும் வளர எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-8)

# மியன்மார் அகதிகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டுள்ளது

### பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர

மியன்மார் அகதிகளுக்கு போதுமான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கும், அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை அளிப்பதற்குமே முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப் படைத் தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

மியன்மார் அகதிகள் தொடர்பில், மேலும் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

"அகதிகள் என்ற மனிதாபிமானத்தோடு மட்டுமே இவர்களை கையாண்டு கொண்டிருக்கிறோம்.

இங்கு வேறு எதனையும் நாங்கள் எடுத்துக் கொள்ளவில்லை. எனவே இது தொடர்பாக யாரும் குழப்பமடையவோ, கவலையடையவோ தேவையில்லை.

தேசிய மற்றும் சர்வதேசரீதியான சட்ட திட்டங்களுக்கு ஏற்ப ஒருங்கிணைப்புடன் இவர்களை நாங்கள் கையாண்டு கொண்டிருக்கின்றோம்.

அகதிகள் எவரும் உடல் ரீதியாகவோ, உளரீதியாகவோ, துன்புறுத்தல்களுக்கோ ஆளாகக்கூடாது என்பதில் மிகக் கவனமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

இவர்கள் தொடர்பாக வெளிவிவகார அமைச்சு, பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்புத் துறை மற்றும் சுகாதாரத்துறை ஆகியன ஒன்றாக இணைந்து பணியாற்றிக் கொண்டு வருகின்றது.

மேலும் மியன்மார் அகதிகள் விவகாரத்தை ஒரு சாரார் தங்களுடைய சுய அரசியலுக்காக அகதிகளைச் சரியாகப் பராமரிக்கவில்லை என்று கூறுகின்றனர்" என்றார். (ம-7)

# 20ஆம் ஆண்டு சுனாமி பேரவல நினைவேந்தல்

(தெல்லிப்பழை)

சுனாமிப் பேரலையின் 20 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். தெல்லிப்பழை துர்க்காபுரத்தில் இயங்கி வரும் சிற்பாலயம் கலைக் கூடத்தில் வரலாற்றுப் பதிவான சுனாமி சிற்பத்தின் முன்பாக இன்று வியாழக்கிழமை (26.12.2024) காலை-09.25 மணியளவில் இடம்பெறவு ள்ளது.

அதனைத் தொடர்ந்து மறைந்த சிற்பக் கலைஞர் ஏ.வி.ஆனந்தனின் கைவண்ணத்தில் உருவான சிற்பங்களின் கண்காட்சி இன்று மாலை-04 மணி வரை இடம்பெறவுள்ளது. (ம-7)






# ஆட்கடத்தலை முறியடிக்க இலங்கை - அமெரிக்கா கூட்டு நடவடிக்கை

இலங்கை அரசாங்கமும், சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகமும் இணைந்து இலங்கையில் பாதுகாப்பான குடியகல்வை ஊக்குவிப்பதற்கும், ஆட்கடத்தலைத் தடுப்பதற்கும் அவசியமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றன.

அதற்கமைய சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் அனுசரணையுடன் இலங்கையைச் சேர்ந்த 69 அதிகாரிகளுக்குக் குடியகல்வுச் சட்டம் மற்றும் கொள்கை தொடர்பில் சான்றிதழ் கற்கைநெறி வழங்கப்பட்டுள்ளது.

அதன்மூலம் அவ்வதிகாரிகள் ஆட்கடத்தல் முயற்சிகளை முறியடிப்பதற்கு அவசியமான அறிவையும், திறன்களையும் பெற்றிருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் "ஆட்கடத்தலை முறியடிக்கும் நோக்கில் சிவில் சமூகத்தை வலுப்படுத்தல்" செயற்திட்டம் மற்றும் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் இணைந்து முன்னெடுக்கப்பட்ட இந்த 6 மாதகாலக் கற்கைநெறியின் ஊடாக அரசதுறை அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், இளைஞர்கள், தன்னார்வலர்கள் மற்றும் சிவில் சமூகப்பிரதிநிதிகள் எனப் பலரும் குடியகல்வுச் சட்டம் பற்றியும், ஆட்கடத்தலை முறியடிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்தும் போதிய தெளிவைப் பெற்றுள்ளனர்.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டிருக்கும் சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பணிப்பாளர் கேப்ரியல் க்ரோ, "ஆட்கடத்தல் என்பது உலகளாவிய ரீதியில் மிகமுக்கிய பிரச்சினையாகக் காணப்படுகின்ற போதிலும், அதற்கு எதிரான போராட்டம் என்பது சமூகங்களின் மத்தியிலிருந்தே தொடங்கும்.

அதற்கமைய பாதுகாப்பான குடியகல்வை ஊக்குவிக்கும் அதேவேளை, ஆட்கடத்தலை முறியடிப்பதற்கு அவசியமான தெளிவூட்டலை வழங்குவதை முன்னிறுத்தி இலங்கை அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றியதையிட்டு பெருமிதமடைகின்றோம்" எனத் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தப்பட்ட அஸ்வெசும

# கொடுப்பனவுத் திட்டம்

### விசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

திருத்தம் செய்யப்பட்ட அஸ்வெசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரிச் சட்டத்துக்கு அமைவாக ஜனாதிபதி அநுர குமாரவிற்கு வழங்கப்பட்ட விசேட அதிகாரங்களுக்கு அமைவாக இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

வறியவர்கள் மற்றும் மிகவும் வறியவர்கள் சமூகப் பிரிவினருக்கு தற்போது வழங்கப்படுகின்ற மாதாந்த நலன்புரிக் கொடுப்பனவுத் தொகை முறையாக 8,500/- ரூபாவை 10,000/- ரூபா வரை அதிரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மிகவும் வறியவர்கள் என்ற பிரிவின் கீழ் வழங்கப்பட்ட 15,000/- ரூபா 17,500/- ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நலன்புரிப் பலன்களைப் பெறும் மாற்றுத் திறனாளிகள், பாதிக்கப் படக்கூடிய மற்றும் மிகவும் ஏழ்மையான குடும்பங்களுக்கான சமூகப் பிரிவுகளில், 480,000 குடும்பங்களுக்கு மாதாந்த நல உதவித் தொகை 5,000 மற்றும் 17,000 ரூபா வழங்கப்படும்.

960,000 வறிய குடும்பங்களுக்கு 10,000 ரூபா நலன்புரிகொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளன.

இது இடைநிலை மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கான இழப்பீடு காலத்தை 31.03.2025 வரை நீட்டித்துள்ளது.

அதற்கமைய, 2024 மே மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு முறைமை இரத்துச் செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஏற்கனவே பலன்களை பெற்று பல்வேறு காரணங்களால் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்படும் பயனாளிகளுக்கும், மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்து தற்போது பரிசீலனைக்கு உள்ளான விண்ணப்பதாரர்களுக்கும், அவர்களின் தகைமையின் அடிப்படையில் இம் மாதம் 31 ஆம் திகதி வரையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-8)

## தேசிய கல்வியியல் கல்லூரி

# கல்விமாணிப் பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

கொரிய நாட்டின் அனுசரணையோடு குளியாப்பிட்டியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப கற்கைகளுக்கான தேசிய கல்வியியல் கல்லூரி கல்விமாணிப் பாடநெறிக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தேசிய கல்வியியல் கல்லூரிகளில் கல்விமாணிப் பாடநெறி ஆரம்பிக்கப்படும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

க.பொ.த உயர்தரத்தில் உயிரியல் தொழிநுட்ப முறைமை மற்றும் பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பாடத்துறைகளைத் தெரிவு செய்தவர்களுக்கென்று விசேடமாக இந்த கல்வியியல் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு க.பொ.த உயர் தரத்திற்கு தோற்றியவர்கள் இப்பாட நெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

நான்கு வருட முடிவில் தொழில்நுட்ப கல்விமாணி பட்டச் சான்றிதழுடன் நேரடியாக ஆசிரியர் சேவைக்கு அனுமதி கிடைக்கும்.

மேலும், தொழில்நுட்பம் சார்ந்த பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாட நெறிகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன. 0

# அதிகரிக்கும் சூட்டு சம்பவங்கள் நடப்பாண்டில் 60 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)


இந்த ஆண்டின் இது வரையான காலப் பகுதியில் 101 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பங்களினால் 60 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 44 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாட்டில் மீண்டும் தலைதூக்கியுள்ள பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை ஒடுக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜய திஸ்ஸ தெரிவித்துள்ளார். (நி-8)

# மார்கழிப் பெருவிழா-2024









யாழ்.கொக்குவில் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் ஏற்பாட்டில் மார்கழிப் பெருவிழா நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது

வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் வழிபாட்டை தொடர்ந்து யாழ்ப்பாணம் பண்பாட்டு மையம் வரை யானைகள் மீது திருமுறைகள் நகர்வலம் கொண்டுவரப்பட்டது. நிகழ்வில் வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பழனி ஆதீன குருமகா சந்நிதானம் சாது சண்முக அடிகளார், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறீசற்குணராஜா, தென்னாடு முதல்வர் க.பார்த்தீபன், சிவகுரு ஆதீன முதல்வர் வேலன் சுவாமிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

(நி-8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 400 | 350 | 400-500 | 450 |
| உருளைக்கிழங்கு | 250 | 220 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 800 | 1300 | 850-900 | 800 |
| தக்காளி | 500 | 500 | 400-500 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 150-200 | 200 |
| கோவா | 220 | 250 | 200 | 300 |
| கரட் | 250 | 280 | 250 | 300 |
| பூசணி | 200 | 200 | 180 | 250 |
| புடோல் | 250 | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 80-120 | 250 |
| சின்ன வெங்காயம் | 350 | 280 | 140-150 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 200 | -- | 200 |
| பாகற்காய் | 1200 | 1100 | 900 | 1500 |
| வெண்டக்காய் | 200 | 350 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 130 | 200 |
| பயற்றங்காய் | 400 | 600 | 250-300 | 300 |
| லீக்ஸ் | 300 | 350 | 300 | 450 |
| பீற்றூட் | 350 | 400 | 300 | 450 |
| கறிமிளகாய் | 800 | 700 | 700-800 | 800 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 600 | 400 | 500-600 | 400 |
| கத்தரிதம்புள்ள | 350 | 300 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 140 | 140 | 150-200 | 250 |
| தேசிக்காய் | 600 | 400 | 400-500 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 200 | 90-180 | 160-200 |
| இராசவள்ளி | -- | 800 | 850 | 800 |
| வெங்காயப்பூ | 550 | -- | -- | -- |
| முள்ளங்கி | 200 | 100 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 120 | -- | 80 |
| வல்லாரை | 80 | 75 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 80 | 80 | 200 |

# ஐ.சி.சி சம்பியன்ஸ் டிராபி போட்டி பெப். 19 ஆம் திகதி ஆரம்பம்

## வெளியானது போட்டி அட்டவணை

2025 ஐ.சி.சி சம்பியன்ஸ் டிராபி போட்டிகள் மற்றும் குழுக்கள் நேற்று முன்தினம் சர்வதேச கிரிக்கெட் நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்டது.

அதற்கு அமைவாக, ஐ.சி.சி ஆண்கள் சம்பியன்ஸ் டிராபியின் ஒன்பதாவது தொடர் மொத்தமாக 19 நாட்கள் நடைபெறும்.தொடர் எதிர் வரும் பெப்ரவரி 19 ஆம் திகதி கராச்சியில் தொடங்கும், இறுதிப் போட்டி மார்ச் 9 அன்று நடைபெறும்.

எட்டு அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரில் மொத்தமாக 15 போட்டிகள் நடைபெறும்.

ஆட்டங்கள் பாகிஸ்தானிலும், ஐக்கிய அரபு எமிரேட்ஸின் டுபாயிலும் விளையாடப்படும்.

மேலும் பாகிஸ்தானில் ராவல் பிண்டி, லாகூர் மற்றும் கராச்சி ஆகிய மூன்று இடங்களில் போட்டிகள் நடத்தப்படும்.ஒவ்வொரு பாகிஸ்தான் மைதானமும் தலா மூன்று குழு ஆட்டங்களைக் கொண்டிருக்கும்.லாகூர் இரண்டாவது அரையிறுதி போட்டியை நடத்துகிறது.

இறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெறாவிட்டால் லாகூரில் மார்ச் 9 ஆம் திகதி இறுதிப் போட்டி நடைபெறும்.

இறுதிப் போட்டிக்கு இந்தியா தகுதி பெற்றால் அந்த ஆட்டம் டுபாயில் ஆடப்படும்.

இரு அரையிறுதிப் போட்டிகள் மற்றும் இறுதிப் போட்டிக்கு ரிசர்வ் நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்தியா பங்கேற்கும் மூன்று குழு நிலைப் போட்டிகளும், முதல் அரையிறுதிப் போட்டியும் டுபாயில் நடைபெறும்.

பெப்ரவரி 19 அன்று கராச்சியில் நடக்கும் குழு ஏ போட்டியின் தொடக்க ஆட்டத்தில் பாகிஸ்தான் நியூசிலாந்தை எதிர்கொள்கிறது.

அடுத்த நாள் டுபாயில் நடைபெறும் போட்டியில் இந்தியா பங்களாதேஷ் எதிர்கொள்ளும்.

2023 ஆம் ஆண்டின் ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் புள்ளிகள் அடிப்படையில் முதல் எட்டு இடங்களை பிடித்த அணிகள் இந்த தொடரில் விளையாடுவதற்கு தகுதி பெற்றன.

போட்டியின் ஏ குழுவில் இந்தியா, நியூசிலாந்து மற்றும் பங்களாதேஷ் ஆகியவற்றுடன் தற்போதைய சம்பியன்ஸ் டிராபி வைத்திருப்பவர்களும் போட்டியின் நடத்துனர்களுமான பாகிஸ்தானும் அடங்கும்.குழு B பிரிவில் ஆப்கானிஸ்தான், இங்கிலாந்து மற்றும் தென்னாப்பிரிக்காவுடன் 2023 ஒருநாள் உலகக்கிண்ண வெற்றியாளர்களான அவுஸ்திரேலியாவும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3282

Search for people, places and things


### யஸ்வந்த்




### சுரேக்கா




### சாரதா




### மனோகரி




### வசந்த்




### மிதுளன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் வெள்ளிவிழா

## 20.12.2024

## வலம்புரி விருது பெற்றோர்



திரு.எஸ்.ராஜேஸ்கரன்



திரு.சே.சயந்தன்



திரு.வி.விமலேஸ்வரன்



திரு.இ.ஆனந்தராஜா (Micro Auto Works)



திரு.சொ.விமலதாசன்

# விடுவிக்கப்பட்ட காணிகளை விவசாய பூமியாக மாற்ற வேண்டும்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)



இராணுவத்தினரின் காணிகளை வடக்கு மக்கள் விடுவிக்கக் கோரவில்லை. அவர்களின் சொந்தக் காணிகளையே விடுவிக்கக் கோருகின்றார்கள் என்ற தெளிவுபடுத்தலை தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துச் சொல்லுமாறு என்னைச் சந்தித்த தென்னிலங்கையைச் சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் தெரிவித்துள்ளேன் என வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

வயாவிளான், பலாலி தெற்கு, பலாலி கிழக்கு மக்களின் அழைப் பின் பேரில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் விடுவிக்கப்பட்ட காணிகளில் விவசாய நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடலும், பூனையன்காடு இந்து மயானத்தில் மர நடுகையும் நேற்று வயாவிளா னில் இடம்பெற்றது. இதன் போது இவ்வாறு தெரிவித்தார்.

இடம்பெயர்ந்தவர்களின் வலி எனக்கும் தெரியும். நானும் இடம் பெயர்ந்த ஒருவன்தான். தற்போது யாழ். மாவட்ட இராணுவத்த தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள யஹம்பத் நேர் சிந்தனை உடைய ஒருவர். எனவே இந்த அரசாங்கத்தின் காலத்தில் படிப்படியாக காணிகளை விடுவிக்க முடியும் என நம்பு கின்றோம். மேலும் விடுவிக்கப்பட்ட காணிகளை விவசாய பூமியாக மாற்றுவதுதான் நீங்கள் எங்களுக்கு செய்யும் உதவி என ஆளுநர் தெரிவித்தார்.

இங்கு காணிகள், வீதிகள் விடுவிக்கப்பட்டதும் தென்னிலங்கையிலிருந்து சில தேவையற்ற கருத்துக்கள் வெளியிடப்பட்டு அழுத் தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. தென்னிலங்கை மக்களுக்கு இங்கு நடைபெறுவது என்ன என்ற உண்மையை தெளிவுபடுத்துமாறு என்னைச் சந்தித்த தென்னிலங்கையை சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் தெரிவித்திருக்கின்றேன்.

வடக்கு மக்கள் எல்லோருக்கும் எதிர்பார்ப்பு இருக்கின்றது என்பது எனக்குத் தெரியும். விரைவில் சாதகமான விடயங்கள் நடக்கும் என நம்புகின்றேன் என்று ஆளுநர் தெரிவித்தார். (6-8-33)

## மிருத்திஷ்ய கோமமும் பிரதோஷ பூசையும்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் ஸ்ரீ கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரன் ஆலய ஸ்ரீ கண்ணகியம்மன் ஆலயங்களில் நாளை வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு மிருத்திஷ்ய கோமம் இடம்பெறவுள்ளது.

அதேவேளை நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு பிரதோஷ விசேட பூசை நடைபெற வுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (6-8)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபாலன சபையில் ஆண்டு தோறும் இடம்பெற்று வரும் திருவாசக முற்றோதல் நிகழ்வு எதிர்வரும் 01.01.2025 புதன்கிழமை இல.66, கல்லூரி வீதி நீராவியடியில் அமைந்துள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் காலை 7 மணிக்கு ஆரம்பமாகி நடை பெறவுள்ளது.

வழமைபோன்று ஆர்வலர்களையும் மற்றும் ஓதுவார்களையும் கலந்து கொள்ளும்படி யாழ்.சைவ பரிபாலன சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (6-8)


நல்லை மங்கையர்க்கரசியின்
சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்

திரு. சிவானந்தம் கணேசலிங்கம்

(Maths Trd, SLTS - I)



எமது பாடசாலையில் அளப்பரிய சேவையாற்றி முப்பத்தாறு வருட சேவையை அகவை அறுபதில் நிறைவு செய்து சேவையிலிருந்து ஓய்வு பெறும் எமது சிரேஷ்ட ஆசிரியர் தனது ஓய்வுக் காலத்தில் மகிழ்வோடு எல்லா நலன்களும் பெற்று இறையருளோடு நீடூழி வாழ அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.

(C-1890)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா சிறைச்சாலையிலிருந்து 8 கைதிகள் விடுதலை

(குருமன்காடு)

நத்தார் பண்டிகையை முன்னிட்டு வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து 8 கைதிகள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று நத்தார் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதிக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்றிருந்த 389 பேர் நாடளாவிய ரீதியில் உள்ள சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்திருந்தது.

அந்தவகையில் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் சிறுகுற்றங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 பேர் விடுவிக்கப்பட்டனர்.

வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையின் பொறுப்பதிகாரி புத்திக பெரெரா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. (6-8-250)

# நிறுக்கும் அளவை கருவிகளுக்கு முத்திரையிடல் கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அள வீட்டுத் திணைக்களத்தினால் நடப்பாண்டுக்கான நிறுக்கும் அளவை உபகரணங்களுக்கான முத்திரையிடல் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஸ்கந்தபுரம், வட்டக்கச்சி மற்றும் கரைச்சி பிரதேச செயலகப் பிரிவிலும் குறித்த வேலைத்திட்டம் இடம்பெற்றது. இதன்போது 200 இற்கும் மேற்பட்ட வர்த்தகர்களது நிறுக்கும் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடல் முன்னெடுக்கப்பட்டதாக மாவட்ட அளவீட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (6-8)



யாழ்.மாவட்ட இலக்கிய விழாவானது உதவி மாவட்ட செயலாளர் செல்வி உ.தர்சினி தலைமையில் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. (படம்: சிவசாந்தன்)

# ஆளுநரை சந்தித்து கலந்துரையாடிய ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் ஆசிரிய வளப் பங்கீடு சரியான முறையில் நடைபெறவில்லை எனச் சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண ஆளுநர் ஆசிரிய தொழிற் சங்கங்கள் மற்றும் கல்வி அமைச்சின் சகல அதிகாரிகளையும் இணைத்து அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் கலந்துரையாடல் நடத்தி இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார். இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில்நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.


வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற முறையற்ற இடமாற்றங்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர்.

இடமாற்றங்கள் பெயரளவுக்கே இடம்பெற்றன என்பதைச் சுட்டிக்காட்டிய அவர்கள் ஆசிரிய ஆலோசகர்களுக்கான இடமாற்றங்கள் பல ஆண்டுகளாக நடைபெறவில்லை என்றும் குறிப்பிட்டனர்.

வடக்கு மாகாணத்தின் முன்பள்ளிக் கல்வி தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனக் கோரியதுடன் ஆசிரியர்களுக்கு தற்போதைய காலத்துக்கு ஏற்ற வகையிலான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டனர். இது தொடர்பாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங் கத்தால் கோரிக்கை கடிதம் ஒன்று ஆளுநரிடம் கையளிக்கப்பட்டது.(6-8-33)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 04 . 03 . 1974



மறைவு 27 . 11 . 2024

அமரர்

**தாமோதரம்பிள்ளை சண்முகவடிவேல் (சண்முகம்)**

சமூகப்பணியாளர்

எமது குடும்ப குல விளக்கின் 31 ஆம் நாள் அந்தியேட்டி கிரியைகள் 27.12.2024 நாளை வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் ஊறணி புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்றைய தினம் மு.ப 10 மணியளவில் குச்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அவ்வேளையில் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி, முகநூல், மின்னஞ்சல் ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர் வளையங்கள், மலர் மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

(672)

குச்சம் ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.

தகவல்
குடும்பத்தினர்

## பதினான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**திரு.மார்க்கண்டு சிவலிங்கம்**

(B.Sc Agri, SLEAS-II, முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர், வலிகாமம் கல்வி வலயம் மருதனார்மடம்)

அன்னை மடியில் 21.06.1956

ஆண்டவன் அடியில் 26.12.2010

எம் குலத்தில் தோன்றிய முத்தான தலைமகனே,
ஞாலத்தில் செம்மையாய் வாழ்ந்த உத்தமரே,
காலத்தால் அழியாத நம் கலங்கரை விளக்கே,
காலங்கள் கடந்தாலும் ஆறவில்லை எம் துயரம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

(664)

கருணாகரப் பிள்ளையார் கோவில் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காட்டுத்தடிகளை வெட்டி வாகனத்தில் கடத்த முயன்ற

## இருவர் கைது



(தருமபுரம்)

அனுமதி இன்றி அரச காட்டுக்குள் புகுந்து பெறுமதி மிக்க காட்டு தடிகளை வெட்டிய குற்றச்சாட்டில் இரண்டு சந்தேக நபர்கள் தருமபுர பொலிஸா ரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பெறுமதி மிக்க காட்டு தடி களை வெட்டி கப்ரக வாகனம் ஒன்றில் சூட்சுமமான முறையில் மறைத்து யாழ்ப்பாணம் கொண்டு செல்லவுள்ளதாக தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைவாக வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது கப்ரக வாகனமும் அதன் சாரதியும் மற்றும் ஒரு நபரும் தருமபுர பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அதனையடுத்து கைதான 2 நபர்களையும், மீட்கப்பட்ட தடிகளையும் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிடி எம் சதுரங்க தெரிவித்துள்ளார். (6-8-316)


லங்கா மஹறால் (PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974



விற்பனைக்கு




பருத்தித்துறை நகரில் கடை விற்பனைக்கு உண்டு.

பார்வையிடும் நேரம்
12.00-1.00 மணிவரை
தொடர்பு கொள்ளும் நேரம்
9.00-4.00 மணிவரை
தொடர்பு:- 077 34 43 034

(2807)

தொடர்பு:- 077 344 3034


## ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ் . நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மணல் நாளை வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு பகிரங்க ஏலத்தில் நீதிமன்ற வளாகத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என யாழ்.நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (6-8)


கண்ணீர் அஞ்சலி



எமது நிலையத்தின் வளர்ச்சிக்கு காத்திரமான பங்களிப்புக்களை வழங்கி வருபவரும் ஆயுட்கால உறுப்பினருமாகிய

சி. சிவகாந்த சர்மா

அவர்களின் அன்புத் தந்தையார்

சிவசுப்பிரமணியக் குருக்கள்

சிவசரவணபவானந்தேஸ்வர சர்மா

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரமடைவதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம்.

கொக்குவில் மத்திய சன சமூக நிலையமும் விளையாட்டுக்கழகமும் (K.C.C.C & K.C.C.C.S.C)

(C-1891)


## சாவகச்சேரி நகராட்சிமன்றம் ஆதனப் பெயர் மாற்றம்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்திற்குட்பட்ட வட்டாரம்-01. கார்த்திகேசு வீதி. 70/9 (74/9 பழையது) எனும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் வீரபாகு இராசம்மா, செல்லையா சுந்தரம் என்னும் பெயரில் ஆதனவரிப் பெயரேட்டில் பதியப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப உறுதியின் பிரகாரம் குறித்த ஆதனத்தினை மீசாலை தெற்கைச் சேர்ந்த வீரபாகு கைம்பெண் இராசம்மாவும் வீரபாகு கணேசமூர்த்தி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு வே.கனகசபை அவர்கள் மூலம் 17850 இலக்க 25.10.1966 ஆம் திகதியில் நிறைவேற்றிய நன்கொடை உறுதியில் இவ்வாதனம் எங்களில் முதலாம் பெயர்வழிகாரிக்கு மகன் முறையும் 2 ஆம் பெயர் வழிகாரனுக்கு சகோதரன் முறையுமான அவ்வூர் செல்லப்பா மயில்வாகனத்துக்கு அழிக்கப்படாத நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

பின்னர் மீசாலை தெற்கு செல்லப்பா மயில்வாகனமும் பெண் இளையபிள்ளையும் அவருடைய மகள் அவ்வூர் சுந்தரம் பெண் பொன்னம்மாவுக்கு பிரசித்த நொத்தாரிசு இ.இராசா அவர்கள் மூலம் 30.03.1975 ஆம் திகதியில் நிறைவேற்றிய 1544 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளனர்.

மேலும் மீசாலை தெற்கு இளையதம்பி இராசையாவும் பெண் நாகேஸ்வரியும் அவ்வூர் செல்லையா சுந்தரம் பெண் பொன்னம்மாவுக்கு பிரசித்த நொத்தாரிசு இ.இராசா அவர்கள் மூலம் 05.04.1978 ஆம் திகதியில் நிறைவேற்றிய 2446 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளனர்.

பின்னர் மீசாலை தெற்கு செல்லையா சுந்தரம் பெண் பொன்னம்மா பிரசித்த நொத்தாரிசு இ.இராசா அவர்கள் மூலம் 01.07.1985 ஆம் திகதியில் நிறைவேற்றிய 5031 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கட்டுவன் தெல்லிப்பளை சின்னத்தம்பி துரைராசாவுக்கு இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

பின்னர் தெல்லிப்பளை கட்டுவன் சின்னத்தம்பி துரைராசா மீசாலை தெற்கு சின்னத்தம்பி சற்குணநாதனுக்கு பிரசித்த நொத்தாரிசு சி.சுரேந்திரன் அவர்கள் மூலம் 11.08.1986 ஆம் திகதியில் நிறைவேற்றிய 3565 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

பின்னர் மீசாலை தெற்கு சின்னத்தம்பி சற்குணநாதன் பெண் இரத்தினபூபதி அவ்வூர் செல்லையா சுந்தரம் மகன் உதயசந்திரனுக்கு பிரசித்த நொத்தாரிசு இ.இராசா அவர்கள் மூலம் 11.07.1993 ஆம் திகதியில் நிறைவேற்றிய 7530 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

பின்னர் மீசாலை மேற்கு தற்காலம் பன்சல வீதி. ஹற்றனைச் சேர்ந்த சுந்தரம் உதயச்சந்திரனால் மீசாலை மேற்கு முருகேசு புண்ணியமூர்த்தி பெண் யோகாம்பிகைக்கு பிரசித்த நொத்தாரிசு ப.குகனேஸ்வரன் அவர்கள் மூலம் 14.09.2020 ஆம் திகதியில் நிறைவேற்றிய 4180 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

வேறொரு ஆதனம் மீசாலை வடக்கு சிவசம்பு கணேசன் என்பவரால் மீசாலை தெற்கு முருகேசு புண்ணியமூர்த்தி மனைவி யோகாம்பிகைக்கு பிரசித்த நொத்தாரிசு இ.இராசா அவர்கள் மூலம் 27.01.1975 ஆம் திகதியில் நிறைவேற்றிய 1495 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இவ்வாதனத்தை வழங்கியுள்ளார்.

பின்னர் உருத்திரபுரம் சிவநகர் கிளிநொச்சியைச் சேர்ந்த கணேசலிங்கம் கைம்பெண் தங்கமுத்துவால் மீசாலை மேற்கு முருகேசு புண்ணியமூர்த்தி பெண் யோகாம்பிகைக்கு பிரசித்த நொத்தாரிசு ப.குகனேஸ்வரன் அவர்கள் மூலம் 31.01.2021 ஆம் திகதியில் நிறைவேற்றிய 4238 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் பாதை உரித்து வந்தடைந்துள்ளது.

பின்னர் மீசாலை மேற்கு. கார்த்திகேசு வீதி முருகேசு புண்ணியமூர்த்தியும் பெண் யோகாம்பிகையும் பிரசித்த நொத்தாரிஸ் செல்வி சின்னத்துரை சிவவாணி அவர்கள் மூலம் 20.08.2023 ஆம் திகதியில் 1563 ஆம் இலக்க பாதை உரித்து பிரகடன உறுதி நிறைவேற்றப்பட்டுள்ளது.

பின்னர் மீசாலை மேற்கு தற்போது பன்சல வீதி. ஹற்றன் சுந்தரம் உதயச்சந்திரனால் பிரசித்த நொத்தாரிசு செந்தில்ராஜ் ஆர்த்திகா அவர்கள் மூலம் 21.08.2023 ஆம் திகதிய 347 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியில் கிணற்றடி வளவு நி.ப 8 குளியில் 1 1/2 இல் சொரியலான 1/4 பங்கிற்கு அதாவது மேற்குறித்த 7988/ S ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்ட நிலப்பரப்பு 2 குளி 00.49 விஸ்தீரணமுடைய ஆதனத்திற்கு முறையான உறுதி ஏதும் இல்லாத காரணத்தினால் இவ் வெளிப்படுத்தல் உறுதியை நிறைவேற்றி உள்ளார்.

பின்னர் பன்சல வீதி. ஹற்றன் தற்போது மீசாலை மேற்கு சுந்தரம் உதயச்சந்திரன் பிரசித்த நொத்தாரிசு செந்தில்ராஜ் ஆர்த்திகா அவர்கள் மூலம் 15.06.2023 ஆம் திகதியில் நிறைவேற்றிய 388 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் கார்த்திகேசு வீதி. மீசாலை மேற்கைச் சேர்ந்த முருகேசு புண்ணியமூர்த்திக்கு வழங்கியுள்ளார்.

01). வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று மீசாலை இறை தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவு சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட J/319 இலக்க கிராம அலுவலர் பிரிவு "கிணற்றடி வளவு" நிலப்பரப்பு 18 மேற்குப் பக்க அரைவாசிக்கு 9 இது ஆட்சிப்படி நிலப்பரப்பு 8 குளி 1 1/2 எட்டு பரப்பும் ஒன்றரை குளியும் இதில் 3/4 பங்குக்கு வடக்கு பக்கமாக நிந்தமான நிலப்பரப்பு 6 குளி 0.37 ஆறு பரப்பும் 0.37 குளியும். இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.கனகசபை அவர்களால் அளந்து வரையப்பட்ட 23.08.2020 திகதிய 7988/ S இலக்க நில அளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 09 குளி 07. இதற்கெல்லை கிழக்கு கார்த்திகேசு நடராசலிங்கத்துக்குரிய ஆதனம். வடக்கு இக்கொள்வனவுகாரருக்குரிய ஆதனம். மேற்கு சின்னையா நல்லையாவுக்குரிய ஆதனம். தெற்கு இதன் மிகுதி ஆதனம். இவ்வெல்லைக்குள்ளடங்கிய காணியும் பயிர்களும் அதைச்சேர்ந்தவைகள் அனைத்துமடங்கலும்.

(02). வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் தென்மராட்சிப்பகுதி சாவகச்சேரி கோவிற்பற்று சாவகச்சேரி பிரதேச செயலகம் சாவகச்சேரி நகரசபை கிராம அலுவலர் பிரிவு மீசாலை மேற்கு பிரிவு J/319 மீசாலை இறை "கிணற்றடி வளவு" நிலப்பரப்பு 2 இரண்டும் குளி 00.49 சைபர் தசம் நான்கு ஒன்பதும் (இதன் பதிவு: F1030/07) இது தற்போது உத்தரவு பெற்ற நில அளவையாளர் K.கனகசபை அவர்களால் 23.08.2020 ஆம் திகதி 7988/s இலக்கத்தில் அளந்து தயாரிக்கப்பட்ட படத்தில் துண்டு 2 எனச் சுட்டப்பட்டுள்ளது. நிலம். செய்பயிர் வான்பயிர்களும் மற்றும் அதற்குரியவைகளும் இதற்கெல்லை கிழக்கு கார்த்திகேசு நடராசலிங்கத்துக்குரிய ஆதனம். வடக்கு இக்கொள்வனவுகாரனுக்கும் முருகேசு புண்ணியமுர்த்தி பெண் யோகாம்பிகைக்குமுரிய ஆதனம். தெற்கு கணேஸ் மகள் சத்யாவுக்கும் நடராசா குலசேகரத்திற்கும் உரிய ஆதனங்கள். மேற்கு சின்னையா நல்லையாவுக்குரிய ஆதனம். இதடங்கலும்.

இவ்விரு ஆதனங்கள் சேர்ந்து தற்போது பிரசித்த நில அளவையாளர் K.கனகசபை அவர்களால் அளந்து வரையப்பட்ட 2024.08.27 ஆம் திகதிய 9434 ஆம் இலக்க நில அளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 9 குளி 12.18 ஆகும்.

தற்போது முருகேசு புண்ணியமூர்த்தி இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனம் தொடர்பாக ஏதாவது ஆட்சேபனை தெரிவிக்க இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் நேரடியாகவோ அல்லது தபாலிலோ சட்டபூர்வ ஆவணங்களுடன் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும். வெளிநாடுகளில் வசிப்பவர்களானால் இங்குள்ள உறவினர்களூடாக தெரிவிக்கலாம். ஆட்சேபனை எதுவும் தெரிவிக்காத பட்சத்தில் மேற்குறித்த ஆதனத்திற்கான உரிமையாளராக விண்ணப்பதாரரின் பெயரை உட்புகுத்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வுட்புகுத்தல் தொடர்பாக ஏற்படும் எவ்வித பிரச்சினைகளுக்கும் நகராட்சி மன்றம் பொறுப்பாளி அல்ல என்பதனைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செயலாளர், நகராட்சிமன்றம், சாவகச்சேரி

(2828)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஹிமாச்சல் பிரதேசத்தில் கடும்பனிப்பொழிவு

❖ மூடப்பட்ட 223 வீதிகள்

❖ நால்வர் உயிரிழப்பு



(டில்லி)

கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டுக்காக சிம்லா, மணாலிக்கு சுற்றுலாப் பயணிகள் குவிந்ததால், கடந்த 24 மணி நேரத்தில் அப்பகுதியில் நிலவிய கடும் பனிப்பொழிவு காரணமாக குறைந்தது 4 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் ஹிமாச்சலில் மூன்று தேசிய நெடுஞ்சாலைகள் உட்பட குறைந்தது 223 வீதிகள் மூடப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சிம்லா, குலு, மண்டி, சம்பா மற்றும் சிர்மௌர் மாவட்டங்களுடன் கின்னவுர், லாஹவுல் மற்றும் ஸ்பிதி ஆகிய இடங்களில் கடும் பனிப்பொழிவு காணப்பட்டது.

இருப்பினும் பனி நிறைந்த மலை வாசஸ்தலங்களுக்குச் செல்லும் வழியில் மோசமான வானிலை மற்றும் ஆபத்தான சூழ்நிலைகள் சுற்றுலாப் பயணிகளின் பயணத்தை தடுக்கவில்லை.

இதனிடையே, கடந்த திங்கட்கிழமை அடல் சுரங்கப்பாதையில் சிக்கித் தவித்த சுமார் 500 வாகனங்களில் சுற்றுலாப் பயணிகளை மாநில பேரிடர் மேலாண்மைக் குழுவினர் மீட்டனர்.

கடந்த 24 மணி நேரத்தில் பல வாகனங்கள் வீதியிலிந்து சறுக்கி விபத்துக்குள்ளானதால் குறைந்தது நான்கு பேர் இறந்துள்ளனர் மற்றும் பலர் காயமடைந்துள்ளனர்.

சிம்லாவில் 145 வீதிகளும், குலுவில் 25 வீதிகளும், மண்டி மாவட்டங்களில் 20 வீதிகளும் மூடப்பட்டன.

356 மின்மாற்றி பழுதடைந்ததால் பல பகுதிகள் மின்சாரம் தடைபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-8)

# கிறிஸ்மஸ் ம

## சிரியாவில் வெடித்த


(டமாஸ்கஸ்)

**சிரியாவில் கிறிஸ்மஸ் மரத்தை எரித்தத எதிராக போராட்டங்கள் வெடித்துள்ளது சிறுபான்மையினரை பாதுகாக்க புதிய இஸ்லா அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எ ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

மத்திய சிரியாவில் கிறிஸ்தவர்கள் அதிகம் வசிக்கும் நகரமான சுகைலாபியாவின் பிரதான சதுக்கத்தில் கிறிஸ்மஸ் மரம் தீப்பிடித்து எரிவதை சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட காணொளி காட்டுகிறது.

இதேவேளை சம்பவம் தொடர்பில் வெளிநாட்டு போராளிகள் கைது செய்யப்பட்டதாக ஜனாதிபதி பஷர் அல்-அசாத்தை வீழ்த்திய எழுச்சிக்கு தலைமை தாங்கிய முக்கிய இஸ்லாமியப் பிரிவான ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் தெரிவித்துள்ளது.

அதேநேரம் சிரியாவில் மத மற்றும் இன சிறுபான்மையினரின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைப் பாதுகாப்பதாக




ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் பிரதிநிதிகள் உறுதியளித்துள்ளனர்.

கிறிஸ்மஸ் தினத்தைக் கொண்டாட சிரியாவில் உள்ள கிறிஸ்தவர்கள் தயாராவதற்கு முன்னைய நாள் இரவு, முகமூடி அணிந்தவர்கள் கிறிஸ்துமஸ் மரத்தில் மர்மமான திரவத்தை ஊற்றுவதை சமூக காண முடிந்தது.

அவர்கள் பற்றி எரிந்த தீ முயன்றார்களா அல்லது அது எரிவதற்கு வழிவகுத்தார்களா வாகத் தெரியவில்லை.

எவ்வாறெனினும் கிறிஸ் வைப்புக்கு எதிராக நேற்று மு





## காசாவிற்கு இஸ்ரேல் கொடுத்த நத்தார் பரிசு இணையத்தை கலங்க வைத்த புகைப்படம்

(ஜெருசலேம்)

நத்தார் பண்டிகையானது இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் வகையில் ஆண்டு தோறும் டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி கிறிஸ்தவர்களால் கொண்டாடப்படுகிறது.

சமாதானத்தின் அடையாளமாக நத்தார் பண்டிகை காணப்பட்டாலும், மத்திய கிழக்கில் அவ்வாறான ஒரு சமாதானம் காணப்படுவதாக தென்படவில்லை.

இஸ்ரேல் - ஹமாஸ், உக்ரைன் - ரஷ்யா போர் என உலக அமைதி சிதைவடைந்து காணப்படுகிறது.

இந்நிலையில் காசாவில் நத்தார் பண்டிகையானது இவ்வாறு தான் இருக்கும் என சமுகவலைத்தளங்களில் புகைப்படம் ஒன்று வைரலாகி வருகிறது. குறித்த புகைப்பட பதிவில் "இந்த ஆண்டு, நத்தார் மரத்திற்கு பதிலாக இடிபாடுகளின் கீழ் நத்தார் தாத்தா பரிசுகளை வைப்பார்.

இஸ்ரேலின் மரியாதையுடன் காசா பகுதியில் கிறிஸ்மஸ் மரம் இப்படித்தான் இருக்கும்" என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த புகைப்படமானது தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. கடந்த 24 மணித்தியாலங்களில் காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் 69 பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...மரம் எரிப்பு! ...த்தது போராட்டம்!

...ரித்ததற்கு
...ள்ளதுடன்,
இஸ்லாமிய
...டும் என்று
...ர்.







...வதை சமூக ஊடகங்களில்

...ி எரிந்த தீயை அணைக்க ...ல்லது அது கொழுந்து விட்டு ...குத்தார்களா என்பது தெளி...லை.

...னும் கிறிஸ்மஸ் மரத் தீ ...ஃ நேற்று முன்தினம்

செவ்வாயன்று தலைநகர் டமாஸ்கஸின் சில பகுதிகள் உட்பட பல தெருக்களில் எதிர்ப்பாளர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

டமாஸ்கஸின் கஸ்ஸா சுற்றுப்புறத்தில் சிலர் சிரியாவிலுள்ள வெளிநாட்டு போராளிகளுக்கு எதிராக கோஷமிட்டனர்.

டமாஸ்கஸின் பாப் டூமா சுற்றுப்புறத்தில், எதிர்ப்பாளர்கள் சிலுவை மற்றும் சிரியக் கொடிகளை ஏந்தி, "எங்கள் சிலுவைக்காக எங்கள் ஆன்மாக்களை தியாகம் செய்வோம்" என்று கோஷமிட்டனர்.

குர்துகள், ஆர்மேனியர்கள், அசிரியர்கள், கிறிஸ்தவர்கள், ட்ரூஸ், அலவைட் ஷியா உட்பட பல இன மற்றும் மத குழுக்களின் தாயகமாக சிரியா உள்ளது.

இவர்களில் இறுதியாக முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக உள்ளனர்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு, பஷர் அல்-அசாத்தின் ஜனாதிபதி பதவி கிளர்ச்சிப் படைகளிடம் வீழ்ந்தது, அசாத் குடும்பத்தின் 50 ஆண்டுகளுக்கும் மேலான ஆட்சி முடிவுக்கு வந்தது.

அதன் பின்னர் பல இடம் பெயர்ந்த சிரியர்கள் தங்கள் வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர் செவ்வாயன்று, 25,000 இற்கும் மேற்பட்ட சிரியர்கள் நாட்டிற்குத் திரும்பியதாக துருக்கி தெரிவித்துள்ளது. (நி-8)

## சிரிக்க நாளொதுக்கிய ஜப்பான்



(டோக்கியோ)

உள்ளூர் வாசிகளின் உடல், மன நலனைக் காக்கும் பொருட்டு ஒருநாளுக்கு ஒரு முறையாவது அவர்கள் சிரித்திட வகைசெய்யும் வகையில் புதிய சட்டம் ஒன்று ஜப்பானில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதத்தின் எட்டாவது நாள், சிரிப்பின் மூலம் ஆரோக்கியம் மேம்படும் நாள் எனக் கொண்டாடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகமாகச் சிரிப்பவர்கள் உடல் ஆரோக்கியத்துடன் நீண்ட நாள் வாழ்வதாக பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டதுடன் மன இறுக்கத்தைச் சிரிப்புப் பயிற்சி குறைப்பதுடன் இதயப் பாதிப்பு உள்ளிட்ட தீவிரப் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் 2025 புத்தாண்டு பிறக்க இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், 2024 ஆம் ஆண்டில் பட்ட வேதனைகள், சோகங்களை மறக்கும் வகையில் ஜப்பானில் ஒசாகாவில் ஒருவருக்கொருவர் சிரித்து மகிழும் திருவிழா நடைபெற்றது.

இதில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். சுமார் 20 நிமிடங்கள் வரை வாய்விட்டு சிரித்து மக்கள் தங்கள் கவலைகளை மறந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## முதியோர் நாடாக மாறுகிறது தென்கொரியா



(சியோல்)

"தென் கொரியா முதியோர் நாடாக மாறுகிறது மக்கள் தொகையில் 20 சதவீதம் பேர் 65 வயதை கடந்தவர்கள்" என தரவுகள் தகவல் தெரிவிக்கின்றன.

தென் கொரியா கிழக்கு ஆசியாவிலுள்ள ஒரு நாடாகும். இங்கு பௌத்த, கிறிஸ்தவ மக்கள் வசிக்கின்றனர். இங்கு வசிக்கும் மக்கள் தொகை 5.17 கோடி. தற்போது தென் கொரியா முதியோர் அதிக எண்ணிக்கையில் வசிக்கும் நாடாக மாறி வருகிறது. 20 சதவீதம் பேர் 65 வயதை கடந்தவர்கள் என தரவுகள் தகவல் தெரிவிக்கின்றன.

இது குறித்து உள்துறை மற்றும் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள புதிய தரவுகள் விவரம் வருமாறு, தென்கொரியாவில் 65 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்களின் எண்ணிக்கை 1.024 கோடியாக உள்ளது. இது மக்கள் தொகையில் 20 சதவீதம் ஆகும். அதேபோல், பிறப்பு விகிதங்கள் குறைந்து வருகிறது. கடந்த 2023 ஆம் ஆண்டு 0.72 சதவீதமாக பிறப்பு விகிதம் சரிந்துள்ளது.

தற்போது நிலவரப்படி, 65 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் 22 சதவீதம். அதேநேரத்தில் 18 சதவீதம் பேர் ஆண்கள். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஐக்கிய நாடுகள் சபையானது 65 அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள்தொகையில் 7% இற்கும் அதிகமானவர் இருக்கும் நாடுகளை வயது முதிரும் சமூகம் என்றும், 14% இற்கு மேல் உள்ளவர்களை வயதான சமூகம் என்றும், 20% இற்கு மேல் உள்ளவர்களை அதிக வயதானவர் சமூகம் என்றும் அழைக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

...ிசு
...ட்ம்

...தையு ...மஸ் ...கும்"

...ப்பட ...லைத் ...வருகி ...தியா ...இஸ் ...பேர் ...தெரி ...நி-8)

## ஷேக் ஹசீனாவை ஒப்படையுங்கள் இந்தியாவுக்கு பங்களாதேஷ் வலியுறுத்தல்



(டாக்கா)

இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை, தம்மிடம் ஒப்படைக்குமாறு பங்களாதேஷ் அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

பங்களாதேஷின் முன்னாள் பிரதமர் 77 வயதான ஹசீனா, அந்நாட்டு மாணவர்கள் முன்னெடுத்த போராட்டங்களால் ஆட்சியை இழந்து நாட்டை விட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். இந்நிலையில் டாக்காவில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், ஹசீனா அவரது அமைச்சரவையில் இருந்த அமைச்சர்கள், ஆலோசகர்கள் மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக பிடியாணை பிறப்பித்துள்ளது. இதனைத் தொடர்ந்து இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனாவை டாக்காவிற்கு திருப்பி அனுப்ப இந்தியாவில் உள்ள தூதரகத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளதாக பங்களாதேஷின் இடைக்கால அரசு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக்காய்ச்சல் உயிரச்சுறுத்தலிலிருந்து மீளுவோம்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

எலிக்காய்ச்சல் தற்போது வட பகுதியில் குறிப்பாக பருத்தித்துறை, வரணி, இன்னும் ஏனைய இடங்களில் பரவி பலருடைய உயிர்களைக் காவுகொண்டுள்ளதை சுகாதாரத் துறையின் செய்திகள் அறிவுறுத்துகின்றன. எலிக்காய்ச்சல் [Rat fever - Leptospirosis] ஒரு தொற்று நோயாக இனங்காணப்பட்டு லெப்ரோ பைரா [Leptospira] எனப்படும் ஒருவகை பக்ரீறியாவினால் பரவுகின்றது. ஏறக்குறைய ஒருகிழமை இந்த பக்ரீறியா நீரில் உயிர்வாழும் தன்மையுடையது. வருடந்தோறும் 1.03 மில்லியன் மக்கள் இந்நோய்த்தொற்றுக்குள்ளாவதாகவும் உலகளவில் வருடந்தோறும் 58,900 மக்கள் இந்நோய்த் தொற்றால் இறப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது மனிதனிலும் விலங்குகளிலும் நோயை உருவாக்கும் வல்லமையுடையதுடன் நோய்த்தொற்று ஏற்பட்டு 2 கிழமைகளில் நோயின் அறிகுறி தென்படத்தொடங்கிவிடும். எலிகளில், நாய்களில், பன்றிகளில் மாடுகளில் மற்றும் குதிரைகளில் இந்நோய் பரவக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மழைகாலங்களில் அதீத மழை பெய்து நீர் தேக்கமடையும் இடங்களில் இவ்வாறான பக்ரீறியா இலகுவில் பெருக்கமடைந்து தொற்றுதலை ஏற்படுத்திவிடும்.

இந்நோயின் முக்கியமான அறிகுறிகளாக அதிகரித்த காய்ச்சல், கண்கள் சிவந்திருத்தல், தலையிடி, தசைப்பிடிப்பு மற்றும் வயிற்றுநோ என்பன கண்டறியப்பட்டுள்ளன. ஆதலினால் காய்ச்சல் வந்தால் அதனை அலட்சியப்படுத்தாமல் விரைந்து மருத்துவரை அணுகி காய்சலுக்கான காரணத்தையும் நோயைக் குணமாக்கவும் முயற்சி செய்தல் வேண்டும். கவனயீனம் உயிரைக்காவு கொள்ளும் அளவுக்கு சென்றுவிடும் என்பதனை இங்கே கவனத்திற்கொள்ள வேண்டும்.

இந்த லெப்ரோபைரோசிசு உலகளவில் பரவி பலருக்கு பாதிப்பையும் குறிப்பாக சிலர் இறப்பதற்கும் காரணமாக இருக்கின்றது. இந்த நோயானது தொற்றுள்ள எலிகளின் சிறுநீர் எமது உடற்பாகங்களில் குறிப்பாக மூக்கு, வாய்ப்பகுதி, கண்கள் மற்றும் உடலில் குறிப்பாக கால்களில் காணப்படும் காயங்களின் ஊடாகவும் எமது உடலில் பரவுகின்றது. அண்மையில் பெய்த அடைமழை காரணமாக நீர் தேங்கியிருந்த இடங்களில் நடந்து செல்பவர்கள் மற்றும் வயற்பரப்பில் வேலைசெய்யும் உழவர் பெருமக்கள் கைகால் பகுதிகளில் காயங்கள் காணப்படும் எவருக்கும் தொற்றினை ஏற்படுத்த வல்லது. அதனால் தேங்கியிருக்கும் நீரில் வாய்கொப்பளிக்கவோ நடந்து திரியவோ நீச்சலடிக்கவோ இன்னும் விளையாடவோ வேண்டாமென அறிவுறுத்தப்பட்டிருக்கின்றது.

**வயலில் வேலைசெய்யும் விவசாயிகளை பாதிக்கும்**

இவற்றை விட இலங்கையில் இந்நோயின் தாக்கம் வருடம் முழுவதுமாக இருந்தாலும் குறிப்பாக விவசாயச் செய்கையில் ஈடுபடும் விவசாயப் பெருமக்களை அதிகம் பாதிக்கின்ற நோயாகவும் காணப்படுகின்றது. விவசாயச் செய்கையில் அதுவும் குறிப்பாக வயல்நீர் படுமிடங்களில் தொற்றுக்கிருமி உட்செல்ல வாய்ப்புக்கள் உண்டு. விவசாய செய்கையில் மார்ச் - மே மாத (சிறுபோக) காலப்பகுதியிலும் ஒக்டோபர்-டிசம்பர் மாத (காலபோக) காலப்பகுதிகளிலும் இந்நோய்த் தொற்று அதிகமாகக் காணப்படுகின்றது. மழைநீருடன் கழிவுநீர் வயற்பரப்பில் கலக்கும் போது லெப்டோபைரா பக்ரீறியத்தை இலகுவில் பரப்பிவிடும். பக்ரீறியாக்கள் நீரில் இலகுவாகப் பரவலையும் தன்மையைக் கொண்டிருப்பதனால் தொற்று விரைந்து பரவிவிடும் வாய்ப்புகள் அதிகம். நெற்செய்கையை விட கால்நடைவளர்ப்பு மற்றும் பன்றிவளர்ப்பில் ஈடுபடுவோருக்கும் இந்நோய்த்தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம். மேலும் மாணிக்கக்கல் அகழ்வோருக்கும் கழிவுநீர் சுத்திகரிப்பு வேலை செய்வோருக்கும், வாய்க்கால்களில் பணிசெய்வோரும் இந்நோயினால் பாதிக்கப்படுகின்றனர்.

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு.




தொற்று நோய்களை விரைந்து கட்டுப்படுத்துவது கடினமாக இருப்பினும் நோய்த்தொற்று ஏற்படாமலிருக்க நாம் முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளைக் கடைப்பிடிப்பதுடன் இந்நோயின் தாக்கத்தை தவிர்க்க கிடைக்கும் தடுப்பூசிகளையும் அவசியம் பெற்றுக்கொள்ள வேண்டும். சுகாதாரத்துறையின் வைத்தியசாலையின் வைத்தியர்களின் அறிவுறுத்தல்களை செவிமடுத்து அதற்கேற்ப அனைத்து முற்பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதுடன் குடும்ப உறுப்பினர்களுக்கும் அயலவர்களுக்கும் இந்த ஆபத்து பற்றி எடுத்துரையுங்கள். தொற்று ஏற்படுத்தும் லெப்ரோபைராவை காவிச்செல்லும் எலிகள் இருப்பதனை அறிந்துகொண்டால் அவற்றை முழுமையாகக் கட்டுப்படுத்தும் நடைமுறைகளுக்கு விரைந்து முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும்.

**பலசரக்கு விற்பனை நிலையங்களின் உணவுகளில் கலக்கும் அபாயம்**

எலிகளின் சிறுநீர் [Rat Urine] மற்றும் மலம் உணவுகளில் கலப்பதற்கான சந்தர்ப்பங்களைத் தவிர்த்தல் மிக அவசியமானதாகும். குறிப்பாக வீடுகளில் இன்னும் பலசரக்கு விற்பனை நிலையங்களில் தானியங்கள் வைத்திருக்கும் கொள்கலன்கள் மற்றும் சாக்கு, உரப்பைகள் என்பனவற்றை பயன்படுத்தாதபோது பாதுகாப்பாக மூடிவைத்திருப்பது நல்லது. இரவு வேளைகளில் நாம் ஓய்ந்த பின்பு எலிகள் விவேகமாக நடந்துகொள்ளும். விற்பனைக்காக வைத்திருக்கும் தானியங்கள் வைத்திருக்கும் கொள்கலன்கள், குறிப்பாக சாக்கு மற்றும் உரப்பைகளை விற்பனை நிலையத்தை மூடும் போது நன்றாக மூடி இரவில் எலிகள் அளையாதவாறு வைத்திருத்தல் அவசியம். தானியப்பைகள் திறந்திருந்தால் அவற்றில் எலிகள் வந்து தங்கி எச்சங்களையும் குறிப்பாக சிறுநீரையும் அதிலேயே கழித்துவிடும்.

எலிப்பிழுக்கைகள் [Rat Excreta] இருந்தால் எம்மவர்களில் சிலர் அலட்சியமாக அவற்றை எடுத்தெறிந்துவிட்டு அல்லது பிடைத்து அவற்றை இலகுவாக அகற்றிவிட்டு பின்னர் விற்பனைக்காக வைத்து விடுவர். வீடுகளிலும் இவ்வாறு செய்பவர்களும் உண்டு. இவ்வாறான எலிகளின் சிறுநீர் கலந்திருக்கும் தானியங்களை மலிவு விலையிலும் விற்றுவிடுவர். மேற்கூறிய பக்ரீறியா தொற்றுள்ள எலியின் சிறுநீர் மற்றும் மலம் கலந்த தானியங்கள் இன்னொருவரின் உயிருக்கே ஆபத்தாக மாறிவிடும். பழுதடைந்த மற்றும் எலிமற்றும் பூச்சிகளின் கழிவுகள் உள்ள தானியங்கள் மற்றும் உணவுப் பொருட்களை எக்காரணம் கொண்டும் விற்பனை செய்யக்கூடாது. உணவாக உண்ணவும் கூடாது.

எலிக்காய்ச்சலின் தீவிரத் தன்மையைக் குறைப்பதற்கு எலிகளை இல்லாதொழிப்பதே சிறந்ததாகும். எலிகளின் எண்ணிக்கையை குறைப்பதுடன் அவற்றை முற்றாக இல்லாதொழிப்பதும் மிகச் சிறந்த நடைமுறையாகும். எலித் தொல்லையை எமது வீடுகளில் பணியிடங்களில் இருந்து இல்லாதொழிக்க பல நடைமுறைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. விதம் விதமான எலிப்பொறிகள் விற்பனைக்கு வந்திருக்கின்றன. பொறிகளை வைத்து எலிகளைப் பிடித்து அகற்றிவிடலாம். இன்னும் எலிகளை கொல்வதற்கென எலிமருந்துகளும் குறிப்பாக நாக பொஸ்பைட்டு [Zinc phosphide] விற்பனைக்கு இருக்கின்றது. அதீத நஞ்சுகளாக இவை இருப்பதனால் அவற்றை கவனமாக கையாளவேண்டும். இவற்றை விட எலிகளின் கால்களைப் பசைபோன்ற தாள்களில் ஒட்டவைத்து பிடிக்கும் முறைகளையும் கடைகளில் வாங்கலாம். எலிகளைக் கட்டுப்படுத்த பூனைகளை மனைகளில், விற்பனை நிலையங்களில் பலர் வளர்ப்பதுண்டு. எலியின் எச்சம் மட்டுமல்ல பூனையின் எச்சமும் கலந்தால் அந்த உணவு உயிரெடுக்கும் ஆயுதமாகிவிடும்.

நீர்தேங்குவதனைத் தவிர்க்கும் வழிவகைகளை மேற்கொள்ளுவதும் அழுக்கு நீர் கலப்பதனைத் தடைசெய்வதும் இந்த தாக்கத்திலிருந்து தவிர்க்கப்பட வாய்ப்புண்டு. லெப்ரோபைரோசிசு ஒரு பாரதூரமான தொற்று நோயாயிருந்தாலும் குணமாக்கக்கூடிய நோயாகும். ஆதலினால் விலங்குகளால் பரவப்படும் நோய்களை சாதாராணமாக எண்ணாமல் நோய்கண்டவுடன் மருத்துவரை நாடி என்னவகையான காய்ச்சல் என அறிந்து அதற்கான மருந்துகளை முன்கூட்டியே எடுத்துக் கொள்ள வேண்டும். நோய்த் தொற்றுக்களில் எப்போதும் அலட்சியம் வேண் டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 72 பயணிகளுடன் வெடித்துச் சிதறிய விமானம்

- 42 பேர் பலி
- கஜகஸ்தானில் துயரம்



(அஸ்தானா)

அஜர்பைஜான் தலை நகரிலிருந்து ரஷ்யாவுக்குப் புறப்பட்ட பயணிகள் விமானம், கஜகஸ்தானில் அவசரமாகத் தரையிறங்குகையில் வெடித்துச் சிதறியதில் 42 பேர் உயிரிழந்துள்ளனர்.

அஜர்பைஜான் ஏர் லைன்ஸ் நிறுவனத்தின் ஜே2-8243 விமானம், 67 பயணிகள் மற்றும் 5 விமான பணியாளர்கள் என 72 பேருடன் ரஷ்யாவின் க்ரோஸ்னி நோக்கிப் புறப்பட்டது.

ஆனால், க்ரோஸ்னியில் நிலவிய கடும் பனிமூட்டம் காரண மாக விமானம் திருப்பி விடப்பட்டது. இதனால், விமானத்தை அவசரமாக கஜகஸ்தானின் அக்தாவ் விமான நிலையத்தில் தரையிறக்கும் சூழல் ஏற்பட்டது.

அப்போது, சிறிது நேரம் வானில் வட்டமடித்தபடி இருந்த விமானம் அக்தாவ் விமான நிலையத்துக்கு 3 கி.மீ முன்பாகவே வேகமாகத் தரையிறங்குகையில் தீப்பிடித்து கடும் விபத்துக்குள்ளானது.


அதைத்தொடர்ந்து, உடனடியாக விபத்து நடந்த பகுதிக்கு வந்த அவசரகால உதவி அதிகாரிகள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். கஜகஸ்தானின் எமெர்ஜென்சி அமைச்சகத்தின் கூற்றுப்படி 42 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், சுமார் 27 பேர் உயிர் பிழைத்ததாகவும், அவர்கள் உடனடியாக அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகின்றன.

விமானத்தில் தொழில்நுட்ப கோளாறு உட்பட வேறு பிரச்சினை ஏற்பட்டதா என்பது குறித்து அதிகாரிகள் விசாரணையைத் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது. (நி-8)

# சுனாமிப் பேரலை நினைவேந்தல் இன்று

**சுனாமி பாதிப்பு ஏற்பட்டு 20 ஆண்டுகள் கடந்துவிட்டன. மக்கள் மனதில் வடு இன்னும் மறையவில்லை. சுனாமியின் பாதிப்பை நினைக்கும் போதெல்லாம் ஒருவித பதற்றத்தைக் கொடுத்துவிட்டுச் செல்கின்றன நினைவுகள்.**



- கடந்த 2004 ஆம் ஆண்டில் சுமத்ரா தீவு கடலில் 9.1 முதல் 9.3 ரிக்டர் அளவிற்குப் பதிவான நில நடுக்கத்தால் இலங்கை உட்பட 14 நாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.
- சுனாமி பாதிப்பு 14 நாடுகளை கடுமையாகத் தாக்கியது. இதில் சுமார் 2.8 லட்சம் பேர் உயிரிழந்தனர்.1,25,000 பேருக்கு மேல் காயமடைந்தனர். 43,786 காணாமல் போயினர்.
- 17 லட்சத்துக்கும் அதிகமானோர் தங்கள் வாழ்விடத்தை இழந்து போயினர்.
- சுனாமியால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடான இந்தோனேசியாவில் சுமார் 1,67,736 பேர் உயிரிழந்தனர்.
- சுனாமியின் சீற்றத்தால் அதிகமாக பாதிக்கப்பட்ட இரண்டாவது நாடு இலங்கை. இங்கு சுமார் 35,322 பேர்உயிரிழந்தனர். 516,150 பேர் தமது வாழ்விடங்களை இழந்து தவித்தனர்.



# இராசிபலன்

26.12.2024
மார்கழி 11, வியாழக்கிழமை
ஏகாதசி பின்னிரவு 12.51 மணிவரை
சுவாதி முன்னிரவு 6.40 மணிவரை

சுபநேரம் -7.57-9.27 மணிவரை
இராகுகாலம்-1.57-3.27 மணிவரை
சந்திராஷ்டமம்
பூரட்டாதி,உத்தரட்டாதி

சுவர்க்கவாயில் ஏகாதசி

வளவன்




சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், பயணத்தால் பலனுண்டு, மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள்.




ஆடம்பர பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், எதிர்பாராத நேரத்தில் பெரிய மனிதர்களின் உதவி கிடைக்கலாம்.




செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.




செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் சிறப்படையும் நாள்.




தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், தேக நலனில் கவனம் எடுக்க வேண்டிய நாள், தேவையற்ற மனக்குழப்பங்களை தீர்ப்பது நல்லது.




நேற்றைய பணியொன்றை இன்றும் தொடரலாம், மாற்று மருத்துவத்தால் உடல் நலன் சீராகும், உறவுகள் வழியில் ஏற்பட்ட மனக்கசப்புக்கள் மாறும்.




பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், நல்லவர்கள் தொடர்பில் நலம் காணும் நாள், உறவினர் வழியில் மனதிற்கினிய செய்திகள் வந்து சேரலாம்.




திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.




தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




வரவுக்கு மீறிய செலவுகள் ஏற்படலாம், எதையும் ஒரு முறைக்கு பல முறை யோசித்து செய்வது நல்லது, தேவையற்ற விவாதங்களை தவிர்ப்பது நல்லது.

உண்மையான அட[illegible] நற்ப[illegible]புகளுக்கும் அடிப்படை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 665





அதுவரையில் வழுதி குலத்துப் புகழ்மாலையை யாராவது பாடுங்கள்!" என்றான் சோமன் சாம்பவன்.

இடும்பன்காரி உடுக்கு ஒன்றை எடுத்து இலேசாக அதைத் தட்டினான். தேவராளன் ஏதோ ஒரு பாட்டுப் பாடத் தொடங்கினான்.

வந்தியத்தேவன் தான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்து இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான் கேட்டுக் கொண்டுமிருந்தான். 'வழுதிகுலம்' என்பது பாண்டியகுலம் என்று அவன் அறிந்திருக்கிறான்.

பாடல் ஏதோ ஒரு சோகப் பிரலாபமாக அவன் காதில் தொனித்து உடுக்கின் நாதமும், சோகப் பாடலின் இசையும் அவன் உள்ளத்தில் ஒரு நெகிழ்ச்சியை உண்டாக்கின. பாடலில் சிற்சில வார்த்தைகள் அவன் காதில் விழுந்தன. அவற்றிலிருந்து அந்த இடத்தில் நூறு வருடங்களுக்கு முன்னால் நடந்த மாபெரும் போரைப் பற்றிய வரலாறு அவன் நினைவுக்கு வந்தது.

ஆம் அங்கேதான் வரகுண பாண்டியனுக்கும், அபராஜித பல்லவனுக்கும் மூன்று நாட்கள் கொடிய யுத்தம் நடந்தது. பல்லவனுக்குத் துணையாகக் கங்க மன்னன் பிருதிவீபதி வந்தான். அப்போரில் மாண்ட லட்சக்கணக்கான வீரர்களைப் போல் அம்மகாவீரனும் இறந்து விழுந்தான். அவனுடைய ஞாபகமாகக் கட்டிய பள்ளிப்படைக் கோவில்தான் இப்போது சதிகாரர்கள் கூடும் இடமாக அமைந்திருக்கிறது.

கங்க மன்னன் இறந்ததும், பல்லவர் படைகள் சிதறி ஓடத் தொடங்கின. பாண்டிய சைன்யத்தின் வெற்றி நிச்சயம் என்று தோன்றியது.

இச்சமயத்தில் சோழர் படைகள் பல்லவர்களின் உதவிக்கு வந்தன. அப்படைக்கு தலைமை வகித்துத் திருமேனியில் தொண்ணூற்றாறு புண் சுமந்த விஜயாலய சோழன் வந்தான். இரண்டு கால்களையும் முன்னமே இழந்திருந்த அவ்வீரப் பெருங்கிழவனை நாலு பேர் தூக்கிக் கொண்டு வந்தார்கள். இரண்டு கைகளிலும் இரண்டு நெடிய வாள்களை ஏந்திக் கொண்டு அவன் பாண்டியர் சைன்யத்தில் புகுந்தான். இரண்டு வாள்களையும் சக்கராகாரமாகச் சுழற்றிக் கொண்டே போனான். அவன் சென்ற இடங்களிலெல்லாம் இருபுறமும் பாண்டிய வீரர்களின் உயிரற்ற உடல்கள் மலைமலையாகக் குவிந்தன.

சிதறி ஓடிய பல்லவ சேனா வீரர்கள் திரும்பி வரத் தொடங்கினார்கள். ஜண ஜண ஜண ஜணார்! - பத்தாயிரம் வாள்கள் மாலைச் சூரியனின் மஞ்சள் வெய்யிலில் மின்னிக் கொண்டு வந்தன! டண டண டண டணார்- பத்தாயிரம் வேல்கள் இன்னொரு பக்கமிருந்து ஒளி வீசிப் பாய்ந்து வந்தன! வாள்களும்வேல்களும் மோதின! ஆயிரம் பத்தாயிரம் தலைகள் நாலாபுறமும் உருண்டன. ஆயிரம் பத்தாயிரம் உயிரற்ற உடல்கள் விழுந்தன! ஈ ஈ ஈ ஈ!- குதிரைகள் கனைத்துக் கொண்டே செத்து விழுந்தன! ப்ளீ ளீ ளீ ளீ!- யானைகள் பிளிறிக் கொண்டே மாண்டு விழுந்தன! இரத்த வெள்ளத்தில் செத்த மனிதர்கள் - மிருகங்கள் உடல்கள் மிதந்தன. இருபதாயிரம் பருந்துகள் வட்டமிட்டுப் பறந்து வானத்தை மூடி மறைத்தன! முப்பதினாயிரம் நரிகள் ஊளை யிட்டுக் கொண்டு ஓடிவந்து போர்க்களத்தைச் சூழ்ந்து கொண்டன! "ஐயோ! ஓ ஓ ஓ!" என்ற ஐம்பதினாயிரம் ஓலக் குரல்கள் ஒன்றாய்ச் சேர்ந்து எழுந்தன! "விடாதே! பிடி! துரத்து! வெட்டு! குத்து!" இவ்விதம் நூறு ஆயிரம் குரல்கள் முழங் கின. பத்தாயிரம் ஜயபேரிகைகள் "அதம்! அதம்! அதம்!" என்று சப்தித்தன. இருபதினாயிரம் வெற்றிச் சங்கங்கள் "பூம்! பூம்! பூம்!" என்று ஒலித்தன.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## வயிறும் உணவும்



ஓர் ஊரில் ஒரு பிச்சைக்காரன் இருந்தான். அவன் பரம்பரைப் பிச்சைக்காரன். அதாவது அவன் தகப்பனும் பிச்சைக்காரன், பாட்டனும் பிச்சைக்காரன். அவர்கள் வழியில் வந்த அவனும் பிச்சைக்காரன்.

பொதுவாக உலகத்தில் வேலை செய்யச் சோம்பல் கொண்டவர்கள் பிச்சைக்காரர்களாக மாறுவார்கள். உழைக்காமல் பிழைக்கலாம் என்று பலர் பிச்சையெடுப்பார்கள். பரம்பரைப் பிச்சைக்காரனான அவனுக்கு வீடு வீடாகப் போய் யேறிப் பிச்சையெடுப்பதே தொல்லையாக இருந்தது.

ஒரு நாள் பிச்சையெடுத்ததை வைத்துக் கொண்டு இரண்டு, மூன்று நாட்கள் சாப்பிட்டு விட்டுப் பிள்ளையார் கோயிலில் படுத்துத் தூங்கினால் என்ன இன்பமாக இருக்கும் என்று அவன் கற்பனை பண்ணிப் பார்த்தான். ஆனால், வீடுகளில் பிச்சை போடுகிறார்களே அவை இரண்டு, மூன்று நாட்களுக்கு நீடித்திருப்பதில்லை.

பழைய கஞ்சியும் சுண்டற்குழம்பும் எத்தனை நாளைக்குத்தான் நன்றாக இருக்கும். சில வீடுகளில் அரிசி போடுவார்கள். அதை அவன் வாங்குவதேயில்லை. அடுப்பு மூட்டி சோறு வடிப்பதென்றால் அது ஒரு பெரிய வேலையென்று அந்தச் சோம்பேறிப் பிச்சைக்காரன் அரிசி வாங்குவதில்லை. கஞ்சி, குழம்பே போதுமென்றிருப்பான். ஒரு நாள் ஒரு பெரிய பணக்காரர் அன்னதானம் செய்தார். அவர் தெய்வத்துக்கு நேர்ந்து கொண்டபடி நூறு பேருக்கு அன்னதானம் செய்தார். அந்த நூறு பேரில் இந்தப் பிச்சைக்காரனும் ஒருவனாகப் போய்ச் சேர்ந்தான்.

அன்னதானம் என்றால் வெறும் சோற்று உருண்டையல்ல நல்ல சாப்பாடு. வடை, பாயாசத்தோடு கூடிய அறுசுவை உணவு. பிச்சைக்காரன் அதுபோல் அவன் ஆயுளில் சாப்பிட்டதேயில்லை.

அவன் ஒரு தீர்மானத்துக்கு வந்தான். இதுபோல் நல்ல சாப்பாடு இனிமேல் கிடைக்காது. இரண்டு, மூன்று நாள் சாப்பாட்டை ஒன்றாகச் சேர்த்துச் சாப்பிட்டுவிட வேண்டியதுதான். இந்த எண்ணத்தோடு மூக்குப்பிடிக்கச் சாப்பிட்டான் அவன்.

சாப்பிட்டபின் எழுந்திருக்கக் கூட முடியவில்லை. மூச்சைப் பிடித்துக்கொண்டு எழுந்தான். கை கழுவி விட்டுப் பிள்ளையார் கோயிலை நோக்கி நடந்தான். வழியில் தொண்டையை என்னவோ செய்வது போலிருந்தது. குமட்டிக்கொண்டு வந்தது. அவ்வளவுதான். சாப்பிட்டதெல்லாம் வாந்தியெடுத்தான். அப்படியே "என்ன வயிறு இது !" என்று வருத்தத்தோடு கூறிக்கொண்டு சென்றான் பிச்சைக்காரன்.

கருத்துரை :- நாள் தோறும் உழைக்க வேண்டும். உழைத்துச் சாப்பிடவேண்டும் என்பதற்காகவே வயிறு ஒரு வேளையுணவை மட்டுமே ஏற்றுக்கொள்ளும் அளவுடையதாய் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களின் உறுதி மற்றும் நம்பகத்தன்மை இயற்கையாகவே உங்கள் மீதான நம்பிக்கையை வளர்க்கும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பொலிஸாரின் நடவடிக்கைகள் புலனாய்வுக்குட்படுத்த வேண்டும்

பொலிஸ் சேவை என்பது மிகவும் புனித மானது. பொலிஸார் நேர்மையாக – பக்கச் சார்பின்றித் தமது பணியைச் செய்யும் போதுதான் இந்த நாட்டில் அப்பாவி மக்கள் நிம்மதியாக வாழ முடியும்.

இருந்தும் பொலிஸ் சேவையில் இருக்கக் கூடிய பொலிஸாரில் கணிசமானவர்கள் பொலிஸ் சேவையைத் துஷ்பிரயோகம் செய் கின்றனர் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

அந்த துஷ்பிரயோகம் என்பது பல்வேறு வழிகளில் நடந்தாகின்றன.

அதில் இலஞ்சம், மரியாதைக்குறைவாக நடத்துதல், கடமையைச் சரியாகச் செய் யாமை, ஒரு தரப்புக்குச் சார்பாகச் செயற் படுதல் எனப் பலவற்றை முன்வைக்க முடி யும்.

அதிலும் குறிப்பாக சிங்களப் பொலிஸா ரில் ஒரு தரப்பினர், தமிழர் என்றதும் இனப் பாகுபாட்டுடன் நடந்து கொள்வதும் யார், எவர் என்ற எந்தத் தகைமையும் பாராமல் ஒருமை யில் – கடுப்புடன் பேசுவதையும் வழமையாகக் கொண்டுள்ளனர்.

இதன் காரணமாகப் பண்புடை மக்கள் பலர் மனவேதனை அடைந்துள்ளனர்.

இவ்வாறு இனவாத சிந்தனையோடு தமிழ் மக்களை ஒருமையிலும் அதட்டலாக வும் கதைக்கின்ற பொலிஸாரே இன ஒற்று மைக்கு எதிரானவர்கள் என்பதை அரசாங் கம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதேசமயம் போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸாரில் பெரும்பகுதியினர் இலஞ்சம் பெறுவதைக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகின்றனர் என்ற குற்றச் சாட்டும் உண்டு.

இதை நாம் கூறும்போது, போக்குவரத்துப் பொலிஸாரில் நேர்மையானவர்கள் எத்தனையோ பேர் உள்ளனர் என்ற உண்மையை நாம் ஒருபோதும் மறந்துவிடலாகாது.

ஆனால் போக்குவரத்துப் பொலிஸாரில் ஒரு பகுதியினர் இலஞ்சம் பெற்றுக் கொள் வதால், அஃது ஒட்டுமொத்தப் பொலிஸ் சேவைக்கும் இழுக்காக அமைகிறது.

எனவே முதலில் போக்குவரத்துப் பொலி ஸார் இலஞ்சம் வாங்குவதைக் கைவிட வேண்டும்.

உண்மையைக் கூறினால், வடபகுதியில் போக்குவரத்துப் பொலிஸாருக்கு ஒருநாளுக்கு கொடுக்கின்ற இலஞ்சத்தின் தொகை பல இலட்சங்களைத் தாண்டுகின்றன.

இங்குதான் ஓர் உண்மையை அரச தரப்பு உணர்ந்து கொள்ள வேண்டும்.

அதாவது போக்குவரத்துப் பொலிஸார் இலஞ்சம் வாங்குவதை முழுமையாகக் கைவிடு வார்களாயின், வாகனச் சாரதிகள் தங்களின் வாகனங்களுக்கான அனுமதிப்பத்திரங்களு டன் போக்குவரத்து விதிமுறைகளையும் மிக நேர்த்தியாகப் பின்பற்றுவர்.

இந்த நிலைமையானது விபத்துக்களை – விபத்து மரணங்களைக் கணிசமாகக் குறைக்கும்.

எனவே தமிழர் பிரதேசங்களில் கடமை யாற்றுகின்ற பொலிஸாரின் நடவடிக்கைகள் புல னாய்வுக்குட்படுத்தப்படுவது கட்டாயமானதாகும்.

# நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தபால் திணைக்களத்தைப் புதுப்பிக்கத் திட்டம்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

(கொழும்பு)

இலங்கைத் தபால் திணைக்களம் நவீன தொழில்நுட்பத்தைப் பயன் படுத்தி மிகவும் புதுமை யான, திறமையான மற் றும் நம்பகமான தபால் சேவையை கட்டியெழுப்பத் திட்டமிட்டுள்ளதாக சுகா தார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சுகாதார மற்றும் வெகு ஜன ஊடக அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கைத் தபால் தலைமையகத்தின் தற்போதைய சேவை நட வடிக்கைகள் மற்றும் எதிர் காலத்திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் நளிந்த ஜய திஸ்ஸ விசேட கலந்துரை யாடலொன்றில் ஈடுபட்டி ருந்தார்.

இலங்கைத் தபால் திணைக்களத்தினால் தற் போது வழங்கப்படும் சேவைகள், தற்போதைய திட்டங்கள், எதிர்கால அபி விருத்தித் திட்டங்கள், தற் போதைய சவால்கள், பிரச் சினைகள் மற்றும் இல ங்கைத் தபால் திணைக் களம் முகங்கொடுக்கும் ஏனைய பிரச்சினைகள் குறித்து இதன்போது விசேட அவதானம் செலுத் தப்பட்டது.

இங்கு கருத்துத் தெரி வித்த அமைச்சர், இல ங்கை தபால் திணைக் களம் சரியான நோக்கத் துடனும் திட்டத்துடனும் செயற்படுவதாகத் தோன் றுவதாகவும், தற்போதுள்ள பிரச்சினைகளைத் தீர்த்து இந்த வரலாற்றுச் சேவையை தேசிய சேவை யாக நவீனப்படுத்திப் பேணு வதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

குறிப்பாக அரசியல் அல் லது தனிப்பட்ட தேவைக ளின் அடிப்படையில் புதிய தபால் நிலையங்களை நிறுவுவது எதிர்காலத்தில் இடம்பெறாது.

தபால் திணைக்களத் தின் எதிர்காலத் திட்டங் களை குறைந்தபட்சம் அடுத்த 10 வருடங்களை இலக்காகக் கொண்டு செயற்பட வேண்டும். திணைக்களம் தொடர்பான திட்டமொன்றை உரிய புரிந்துணர்வுடன் செயற் படுத்துவதுடன், அதற்காகத் திணைக்களம் தயார் படுத்தப்பட வேண்டுமென அமைச்சர் சுட்டிக்காட்டி னார். (ம-7)

# வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகம்

## 3ஆம் திகதியிலிருந்து கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவல கம் எதிர்வரும் 3 ஆம் திகதியில் இருந்து கிளி நொச்சியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் இயங்க வுள்ளது.

வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவல கம் தற்போது யாழ்ப்பாணத் தில் இயங்கி வருகின்றது.

இதற்கான புதிய அலு வலகம் ஒன்று கிளிநொச்சி நகரில் பிரதான தபாலகம் அருகில் அமைக்கப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட அலுவலகம் எதிர்வரும் 3 ஆம் திகதி திறக்கப்பட்டு அன்று தொடக்கம் கிளி நொச்சியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் இயங்க வுள்ளது.

புதிய கட்டடத்துக்கான அடிக்கல் 4 ஆண்டுகளுக்கு முன்னர் அப்போதைய மாகாண காணி ஆணை யாளர் குகநாதனால் நாட் டப்பட்டமை குறிப்பிடத்தக் கது. (ம-7)

# மஹா கணபதி ஹோமம்

யாழ். வண். வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளை யார் தேவஸ்தானத்தில் 04.01.2025 சனிக்கிழமை நடைபெறவிருந்த மஹா கணபதிஹோமம் எதிர் வரும் 02.01.2025 வியா ழக்கிழமை மு.ப 10.30 மணிக்கு நடைபெறும் என பிரதம குருக்கள் சிவஸ்ரீ து. விவேகானந்தக்குருக்கள் தெரிவித்துள்ளார். (ம-7)

# இறைச்சியை இலஞ்சமாக பெற்ற இருவர் கைது

ஒரு கிலோ கோழி இறைச்சியை இலஞ்சமாக வாங்கிய வருமான வரி உத்தியோகத்தர் மற்றும் களப் பணியாளரும் இல ஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிக ளால் கைது செய்யப்பட்ட னர்.

கொஸ்கம பிரதேசத் தைச் சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டுக்கு அமைய சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ள னர்.

முறைப்பாட்டாளருக்கு சொந்தமான கடையின் அடுத்த வருடத்திற்கான வர்த்தக அனுமதிப்பத்தி ரத்தை வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக குறி த்த சந்தேகநபர்கள் 1,170 ரூபா பெறுமதியான ஒரு கிலோ கோழி இறைச் சியை இலஞ்சமாகக் கோரி யதாகத் தெரிவிக்கப்படு கிறது.

விசாரணையின் போது முறைப்பாடு செய்த வர்த்த கரின் கடைக்கு முன்பாக சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ள னர். (ம-7)

# தொடர் திருட்டுக்களில் ஈடுபட்ட ஐவர் கைது

யாழ்ப்பாணம், வவு னியா உட்பட நாட்டின் பல் வேறு பகுதிகளில் 21க்கும் மேற்பட்ட வீடுகள் மற்றும் தங்க நகைக் கடைகளில் நுழைந்து பணம், தங்க நகைகள், கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பல கோடி ரூபா பெறுமதி யான சொத்துக்களை திரு டிய சந்தேக நபர்களை கண்டி – கலஹா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர்கள் 19, 21, 22, 23 மற்றும் 26 வயது டைய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என அடை யாளம் காணப்பட்டுள்ள னர்.

யாழ்ப்பாணம், வவு னியா, ஊர்காவற்துறை, கம்பளை, கலஹா, நுவரெ லியா, கந்தபொல மற்றும் மாத்தளை ஆகிய பகுதிக ளில் உள்ள வீடுகள், கோவில்கள், தங்க நகைக் கடைகள் என்பனவற்றில் 4 வருடங்களாக இந்தக் குழு வினர் திருடியதாக தெரிய வந்துள்ளது. (ம-7)

# உயிரிழந்த நிலையில் காட்டு யானை மீட்பு

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி வனஜீவ ராசிகள் சுற்றுவட்டாரக் காரியாலயப் பிரிவிற்குட் பட்ட பகுதியில் திக்கோடை யில் உயிரிழந்த நிலை யில் யானை ஒன்று மீட்கப் பட்டுள்ளதாக வெல்லா வெளி வனஜீவராசிகள் சுற்றுவட்டாரக் காரியாலய அதிகாரிகள் தெரிவித்த னர்.

இந்த யானை நேற்றுப் புதன்கிழமை (25) மீட்கப் பட்டுள்ளது. அப்பகுதியில் உள்ள வாய்க்கால் ஒன்றி னுள் சுமார் 20-25 வயது மதிக்கத்தக்க ஆண்யானை ஒன்றே சடலமாக மீட்கப்பட் டுள்ளது.

மிக நீண்ட காலமாக வெல்லாவெளிப் பிரதேச செயலகப் பிரிவில் காட்டு யானைகளின் அட்டகாசங் களும், தொல்லைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நிலையில் உயி ரிழந்த இந்தக்காட்டுயானை யின் உடல் மீட்கப்பட்டுள் ளது. (ம-7)

# உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் இருவர் கைது

நாட்டின் பல்வேறு பகு திகளில் பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்புக்களில் உள்நாட் டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி களுடன் சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப் பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மஹவிலச்சிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பேமடுவ பகுதியில் உள்நாட்டில் தயா ரிக்கப்பட்ட துப்பாக்கியை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் மஹவிலச்சியப் பொலிஸ் நிலைய அதிகாரி கள் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந் தேகநபர் 26 வயதுடைய பேமடுவ பகுதியைச் சேர்ந் தவராவார்.

இதேவேளை, தம் புள்ளை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட பல்லேகம பகுதியில் உள்நாட்டில் தயாரிக்கப் பட்ட துப்பாக்கியை வைத்தி ருந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந் தேக நபர் தம்புள்ளைப் பல் லேகமப் பகுதியைச் சேர் ந்த 35 வயதுடையவரா வார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலம்புரியின் வெள்ளிவிழா
## 20.12.2024

## வலம்புரிக்கு
### வாழ்த்துப் பா....

வாழிய... வாழிய... வாழிய... வாழிய...!
வாழிய... வாழிய வே...!
வளர்பிறை நாளிதழ் முழமதி யாகிய
வலம்புரி வாழிய வே...!
நல்மொழி தமிழ்மொழி உலகெலம் பரப்பிய
வலம்புரி வாழிய வே...!
இலக்கியம் பண்பாடு வானுயர் வளத்திட்ட
வலம்புரி வாழிய வே...!
கலைதரு ஓவியம் காவிய மாக்கிய
வலம்புரி வாழிய வே...!
இறையியல் தொழில்துறை மேம்பிட பணிசெய்த
வலம்புரி வாழிய வே...!
படித்தவர் பாமரர் யாவரும் பாராட்டும்
வலம்புரி வாழிய வே...!
நடுவுநிலை நீ நின்று அறிவொழி புகுத்திட்ட வலம்புரி
என்றென்றும் வாழிய வே...!

- சாந்தையூரிவன் -

## வலம்புரியே !
### வாழி வாழியென்பேன் பலவரி

வியாழவரி கண்ட கோபுரமே !
வலம்புரி
நவதளக் கலசம் உயரச்
சாலம்புரி
விளம்பிடும் வாய்மை கொண்டு
சீலம்புரி
திரிபுரம் எரித்த சிவனாய்
அவதரி
கரிமா வண்ணன் கையிலிருந்து
எச்சரி
சரியாத தமிழால் சத்தியத்தை
உச்சரி
வரியாக அறியும் தலையங்கமுன்
அசரீரி
பொன் வைர பவளமாலைச்
சிங்காரி
நூற்றாண்டு காணுவாள் விஜய
சுந்தரி
வாழி ! வாழி ! என வாழ்த்துவோம்
பலவரி

மகேசன் கஜேந்திரன்

## அகவை
### இருபத்தாறில் நீ.....

வாசகர் நெஞ்சமெல்லாம் நிறைந்து
வானம் வரை உயர்ந்த வலம்புரியே
இன்றுனக்கு அகவை 25 நிறைந்தமைக்கு பாராட்டுக்கள் பல
நம்நாட்டில் நிரந்தர சமாதானம் நிலவவும்
காலத்தின் தேவைக்கு ஏற்பவும் கவர்ச்சியாய்
ஆசிரியர் தலையங்கம் தருவது நீதான்
வாசகர்கள் நலமாய் வாழும் நோக்குடன்
சுகவாழ்வுப் பகுதியில் வைத்தியர்களின்
அறிவுரைகள் பல கூறுவதும் நீதான்
எம்மினத்தவர்களின் பிரச்சினைகள் தீர
சங்குநாதம் நடத்தும் ஆலடி மாநாட்டில்
ஆலோசனைகள் பல சொல்வதும் நீதான்
தமிழினம் ஒற்றுமையாக வாழ வழிகாட்டும்
ஆன்மிகச் சிந்தனைகளை தேடிப்பிடித்து
பற்பல பகுதிகளாய் வெளியிடுவதும் நீதான்
என்றுமே யாவரும் விரும்பும் வலம்புரியே
நீ வெள்ளிவிழாக் கடந்தும் வெற்றிநடைபோட
வாழ்த்துகிறேன் வாழியவே !

கலாபூஷணம் இ.காசிப்பிள்ளை,
கொடிகாமம்.

## இன்று ஒரு தகவல் 289



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# நாடித்துடிப்பு

உடம்பு சரியில்லை என்று சொல்லிக் கொண்டு ஒரு வைத்தியரிடம் போனால் அவர் கையைப் பிடித்துப் பார்க்கிறார். எதற்கு? எவ்வளவு பணம் வைத்திருக்கின்றோம் என்று தெரிந்து கொள்வதற்கா? அதற்காக இல்லை. நாடித்துடிப்பு எப்படி இருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்கு. உடம்பு நன்றாக இருக்கிறதா? இல்லையா? என்பதை நாடித்துடிப்புக் காட்டிக் கொடுத்து விடும். ஒவ்வொரு தடவையும் இதயம் சுருங்கும் போது இரத்தம் வெளியே தள்ளப்படுகின்றது. அதை ஒரு நாடித்துடிப்பாக நாம் உணருகின்றோம். நாடித்துடிப்பை மணிக்கட்டிலே தான் பார்க்க வேண்டும் என்று இல்லை. கழுத்துக்குப் பக்கத்திலே, முழங்கால், கணுக்கால் பின்பக்கம் இப்படி பல இடங்களில் பார்த்து தெரிந்து கொள்ளலாம். ஒரு இடத்திற்கு இரண்டு இடமாகப் பார்த்து தெரிந்து கொள்வது தான் நல்லது.

கையிலே உள்ள இரத்தக் குழாயிலே ஏதாவது தடையிருந்தால் இரண்டு கை மணிக்கட்டிலே உள்ள துடிப்புக்கும் வித்தியாசம் இருக்கும். ஒருவருக்கு நாடித்துடிப்பு கையிலே ஒரு விதமாகவும் காலிலே ஒரு விதமாகவும் இருக்கும் என்று வைத்துக் கொள்ளுங்கள் வயிற்றுப் பகுதியிலே எங்கேயோ இரத்தக் குழாயிலே சுருக்கம் ஏற்பட்டிருக்கிறது என்று அர்த்தம். சாதாரணமாக ஒரு சராசரி மனிதனுக்கு நிமிடத்திற்கு 72 தடவை நாடி துடிக்கும். (Normal pulse 72/min) சில சந்தர்ப்பங்களிலே இது அதிகமாகும். காய்ச்சல் வந்தால் உடம்புச் சூடு அதிகமாகும். அந்த சமயம் நாடித்துடிப்பும் அதிகமாகும். உடம்பு உஷ்ணம் சாதாரண நிலைமையிலேயே 98.4°F டிகிரி காய்ச்சலினால் 99.4°F டிகிரி ஆகிவிட்டால் நாடித்துடிப்பும் 80 ஆகி விடும். அதாவது உஷ்ணம் 1°F அதிகமாகினால் துடிப்பு 8 எண்ணிக்கை அதிகமாகிவிடும்.

குழந்தைக்கு 1 டிகிரி கூடினால் துடிப்பு 12 அதிகமாகிவிடும். பெரியவர்களை விட குழந்தைகளுக்கு நாடித்துடிப்பு அதிகமாக இருக்கும். அதைப் பார்த்து விட்டு பயந்து விடக் கூடாது. பிறந்த சமயத்திலே குழந்தையினுடைய நாடித்துடிப்பு நிமிடத்திற்கு சுமார் 130. ஒரு வருடத்திற்குப் பின்னர் 110. 3 வருடத்திற்குப் பின் 100. இப்படி குறைந்து கொண்டே வந்து விடும். 8 வயதிலே 90. 12வயதிலே நாடித்துடிப்பு 80 இருக்கும். நாடித்துடிப்பு அதிகமாகின்றதா இல்லையா என்பதை வைத்து சில காய்ச்சல்களை கண்டு பிடிக்கலாம். இப்போது உதாரணத்திற்கு மலேரியாக் காய்ச்சல் வந்தால் நாடித்துடிப்பு அதிகமாகவும் டைஃபாய்டு காய்ச்சல் வந்தால் நாடித்துடிப்பு அதிகமாகுவதில்லை. ஒருவர் காய்ச்சல் என்று சொல்லிக் கொண்டு வைத்தியரிடம் வந்தார். வைத்தியர் பார்க்கின்றார். Tempe rature 102°F அதாவது சாதாரண நிலையை விட 3.5°F அதிகமாக இருக்கும். அப்படி என்றால் pulse rate 1 டிகிரிக்கு 8 வீதம் அதிகமாகஇருக்க வேண்டும். அதாவது 28 அதிகமாக இருக்கும். அப்படி என்றால் சாதாரணமாக 72 உடன் 28 சேர்ந்தால் நாடித்துடிப்பு 100 இருக்கும் என்று எதிர்பார்க்கின்றார். ஆனால் அப்படி இல்லை. 80, 85 தான் இருக்கும் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படி என்றால் மலேரியா இல்லை. டைஃபாய்டாகத் தான் இருக்க வேண்டும் என்று யூகிக்கிறார்.

pulase உடன் Rhythm கூட மிகவும் முக்கியம். இப்போது இதை கவனியுங்கள். normal நாடித்துடிப்பு நிமிடத்திற்கு 72 என்றால் ஒரு 5வினாடிக்கு 6 துடிப்பு. ஒருவர் கையைப் பார்க்கின்றீர்கள். அல்லது ஸ்டெதாஸ் கோப் வைத்துப் பார்க்கின்றீர்கள். முதல் 5 வினாடியிலே 7 துடிப்பு. அடுத்த 5 வினாடியிலே 6. அடுத்த 5 வினாடியிலே 7. இப்படி வித்தியாசமாக இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். என்ன அர்த்தம் இதயம் ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியிலே ஒரு தடவை அதிகமாக துடிக்கும் என்று அர்த்தம். இதற்கு regulary irregular pulse என்று பெயர். சில வகை இதய கோளாறுகளுக்கு இது ஒரு அடையாளம்.

regulary irregular pulse வகை எப்படி என்றால் முதல் 5 வினாடியிலே 6 துடிப்பு. அடுத்த 5 வினாடியிலே 13. அடுத்த 5 வினாடியிலே 9. அடுத்தபடியாக வெறும் 2 இப்படி மாறிமாறித் துடிக்கும். இப்படி இருந்தால் நிலைமை இன்னும் கொஞ்சம் கடுமை என்று அர்த்தம். நாடித்துடிப்பினுடைய விதமும் அமைப்பும் கூட சில வியாதிகளை கண்டுபிடிப்பதற்கு உதவும். சாதாரணமாக ஒருவர் மூச்சை இழுக்கும் போது நாடித்துடிப்பு விரைவாகவும் மூச்சு விடும் போது மெதுவாகவும் இருக்கும். இதற்கு நேர் மாறாக இருந்தால் இதயத்தை மூடியிருக்கின்ற membrane லே ஏதோ நோய் என்று அர்த்தம்.சில சமயம் இதயம் பலமாகவும் பலம் குறைவாகவும் மாறி மாறி துடிக்கும். ஒரு துடிப்பு பலமாகவும் அடுத்தது குறைவாகவும் இருந்தால் இதய தசையிலே ஏதோ சீரியஸ் என்று அர்த்தம். சில வைத்தியர் நாடித்துடிப்பை பார்த்து விட்டே blood pressure எவ்வளவு என்று உத்தேசமாக சொல்லி விடுவார்கள். கொஞ்சம் அழுத்திப் பிடித்துப் பார்ப்பார்கள் blood pressure தெரிந்து கொள்வதற்கு. சீனாவிலே ஒரு பெரிய வைத்தியர் நாடித்துடிப்பு பார்ப்பதிலே வல்லுநர். நாடித்துடிப்பை மட்டும் பார்த்து என்ன வியாதி என்று துல்லியமாக கண்டுபிடித்து விடுவாராம்.

ஒரு தடவை எனக்கு ஆசை வந்தது. வைத்தியர்கள் மாதிரி டெதெஸ் கோப்பை காதிலே வைத்து பார்க்க வேண்டும் என்று . எனக்கு தெரிந்த டொக்டரிடம் அதை வாங்கி காதிலே வைத்து அவருடைய நெஞ்சிலே வைத்து சோதித்துப் பார்த்தேன். நார்மல் பல்ஸ் ரேட் ஒரு நிமிடத்திற்கு 72 தான் இருக்க வேண்டும். ஆனால் அப்படி இல்லை 60 தான் இருந்தது. என்ன டொக்டர் உங்களுக்கே நாடித்துடிப்பு சரியாக இல்லையே என்று கேட்டேன். அவர் நிதானமாகச் சொன்னார். நீங்கள் டெதெஸ்கோப்பை வைத்துப் பார்க்கின்ற இடம் என்னுடைய சட்டைப் பாக்கெட். அதுக்குள்ளே இருப்பது எனது கடிகாரம் நிமிடத்திற்கு 60 விநாடி தானே. அந்த சத்தம் தான் நீங்கள் கேட்கின்றது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எலிக்காய்ச்...

யில் அவசர சிகிச்சைப் பிரிவில் நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த வைத்தியர்கள்,

"தற்போது முன்னெடுக்கும் தடுப்பு நடவடிக்கைகளை மக்கள் தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

ஆரம்பத்திலேயே வைத்திய சாலைக்கு வர வேண்டும். சிகிச்சை எடுக்க வேண்டும்.

இதன்மூலம் நோய் தீவிரமாகுவதையும் இறப்பையும் தடுக்கலாம்" எனத் தெரிவித்துள்ளனர். (ம-7)

## கார் மோதியதில்...

களின் தந்தையான அழகராசா நாகராசா (வயது-76) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த நவம்பர் மாதம் 2ஆம் திகதி கல்வியங்காட்டிலுள்ள தனது மகள் வீட்டுக்குச் சென்றுவிட்டு சைக்கிளில் வந்தபோது கார் ஒன்று இவரை மோதியுள்ளது.

இதில் படுகாயமடைந்த இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு வீடு திரும்பிய நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## மதுபோதையில்...

வரத்து நடவடிக்கையின் கீழ் மது போதையில் வாகனம் செலுத்தியவர்கள் உட்பட மொத்தம் 8,747 சாரதிகளுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பண்டிகைக் காலங்களில் வாகன விபத்துக்களைக் குறைக்கும் நோக்கில் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பணிப்புரையின் பேரில் கடந்த 23ஆம் திகதி முதல் இந்த விசேட போக்குவரத்து நடவடிக்கை அமுல்படுத்தப்பட்டிருந்தது.

இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டில் வீதி விபத்துக்களால் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

## கழுத்தில்...

கப்பட்ட ஒருவர் வைத்தியர்கள் மேற்கொண்ட சத்திரசிகிச்சையினால் உயிர் ஆபத்தின்றிக் காப்பாற்றப்பட்டார்.

குறித்த சத்திரசிகிச்சை நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

கழுத்தில் கூரியதடி ஒன்று குத்தி மறுபக்கம் வந்த ஒருவர் ஆபத்தான கட்டத்தில் வவுனியா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

குறித்த நபருக்கு வைத்தியசாலையில் உரிய நேரத்தில் விரைவாக முன்னெடுக்கப்பட்ட சத்திரசிகிச்சை மூலம் அவரது கழுத்தில் குற்றிய தடி அகற்றப்பட்டதுடன் அவர் உயிர் ஆபத்தின்றிக் காப்பாற்றப்பட்டார்.

இந்த வெற்றிகரமான சத்திர சிகிச்சையினை உணர்வழியியல் மருத்துவ நிபுணர் நாகேஸ்வரன் தலைமையிலான மயக்கமருந்து (Anesthesia) அணியினருடன் இணைந்து சத்திர சிகிச்சை நிபுணர் ரஜீவ் நிர்மலசிங்கம் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டிருந்தனர். (ம-7,250)

## கிளிநொச்சியில்...

குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று மாலை 5.30 மணியளவில் கிளிநொச்சி ஏ9 வீதி வலயக்கல்விப் பணிமனைக்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களை எதிரே வந்த டிப்பர் மோதித் தள்ளியதில் இக்கோரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் 2 வயதேயான கஜானன் அபிவரணி என்ற குழந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்தது. மற்றும் வரதீஸ்வரன் கஜானன் (வயது-40), கஜானன் யாழினி (வயது-33 ), கஜானன் இசைநிலா (வயது-6 ) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் கஜானன் யாழினி மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருவதோடு டிப்பர் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-7,100,316)

## பல அத்தியாவசிய...

தாக வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

சந்தையில் ரின் மீனின் விலை தற்போது 425-490 ரூபாயாக விற்பனை செய்யப்படுகின்றது. எனினும் அதனை உள்ளூர் உற்பத்தியாளர்கள் 300 ரூபாய் எனத் தெரிவிப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி இந்த வாரம் ரின் மீன்கள் உள்ளிட்ட சில பொருட்களின் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படும் என அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும், எதிர்வரும் 10ஆம் திகதி வரை அரிசியை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## பரிசு...

காப்பு அதிகாரி நிரோஷ் ஆனந்த இதனைத் தெரிவித்தார்.

சில பரிசுகளை வென்றதாக கூறி வாடிக்கையாளர்களுக்குத்தொலைபேசியில் அழைப்பு விடுத்து பண மோசடி செய்ததாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

AI தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சில முறைகேடுகள் நடப்பதாக முறைப்பாடுகள் பதிவாகியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறான அழைப்புகள் மற்றும் சம்பவங்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு பொதுமக்கள் விசேட அவதானம் செலுத்த வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## வட...

னில் நடைபெற்றது.

இங்கு உரையாற்றிய வடக்கு ஆளுநர் 2015 ஆம் ஆண்டு காலத்தில் யாழ். மாவட்டச் செயலராக நான் இருந்தபோது படிப்படியாகப் பல பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டன. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் குடியமரவில்லை எனப் பாதுகாப்புத் தரப்பினர் எங்களுக்குத் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் வீட்டுத் திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தினோம்.

மக்களும் எதிர்பார்த்ததைப் போன்று மீள்குடியமர்ந்தார்கள். 2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தைத் தொடர்ந்து காணி விடுவிப்புக்கள் நடைபெறவில்லை.

தற்போது யாழ். மாவட்ட இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள யஹம்பத் நேர் சிந்தனை உடைய ஒருவர். எனவே இந்த அரசாங்கத்தின் காலத்தில் படிப்படியாகக் காணிகளை விடுவிக்க முடியும் என நம்புகின்றோம் என்றார். (ம-7,33)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.12.25
சீட்டிழுப்பு இலக்கம் 5696
B 7 1 6 1 5 3
அத சம்பத
B 6 1 5 3
சீட்டிழுப்பு இலக்கம் 271
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.12.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1726
S 36 48 49 73 S
Double Chance 07781

மெகா பவர்
திகதி 25/12/2024
சீட்டிழுப்பு இலக்கம் 2044
S 20 01 18 46 65
045666

லக்கி 7 VIP
திகதி 2024.12.25
சீட்டிழுப்பு இலக்கம் 522
G 8 6 8 5 5 8 G

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3938
சீட்டிழுப்பு திகதி 25.12.2024
U 13 29 50 61
U 165324

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.12.25
சீட்டிழுப்பு இலக்கம் 1005
கும்பம் 19 23 39 55 கும்பம்
018713 32

உத்தியோகபூர்வ முடிவுகள்
25.12.2024 வெற்றி வாரம் 404
B 4 9 6 6 1 8
33999
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.27,879,381.20

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2670
சீட்டிழுப்பு திகதி 2024.12.25 தினம் புதன்கிழமை
15 24 61 67 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,941,785.60

சனிதா
திகதி 25.12.2024 வெற்றி வாரம் 4831
33 56 57 60 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,571,390.80
09679

ஜயோதா Jayoda
திகதி 2024.12.25 வெற்றி வாரம் 2089
33 40 47 60 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 26,989,825.20

சீட்டிழுப்பு வாரம் 4382
சீட்டிழுப்பு திகதி 25.12.2024 தினம் புதன்கிழமை
25 33 50 60 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,664,882.40
182345

B 22 25 33 49 69
சீட்டிழுப்பு 1846
25.12.2024 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.559,344,864.80

அட கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம்: 2496
சீட்டிழுப்பு திகதி: 2024.12.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.57,145,096.00
03 28 47 69 A
796779

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை வாடகைக்கு தேவை

மோட்டார் சைக்கிள் Show room போடுவதற்கு யாழ். நகரை அண்டிய பகுதிகளில் கடை ஒன்று வாடகைக்கு தேவை.

**077 919 1529** (673)

## உலர் உணவு வழங்கல் உதவியாளர் தேவை
(Issuing Officer)

கிளிநொச்சி நகரம், மந்திகை, நெல்லியடி ஆகிய இடங்களுக்கு உலர் உணவு வழங்கல் உதவியாளர் தேவை.

**077 540 1211**
**071 841 7299** (673)

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள் தொடர்புகளுக்கு: (629)

**075 033 6759**

## V2 VISA SERVICES
### கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

### விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-1892)

## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் கைதடி மெயின் றோட்டுடன் 42 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- 1 ½, 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- 20 அடிப் பாதையுடன், நிலப் பரப்பு, மேட்டு நிலம், நன்னீரூற்று
- UDA அனுமதி, பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்,
- தரகர் தேவையில்லை
- பரம்பரை ஆவணம்
- பார்வையிடும் நேரம் : காலை 8.00 முதல் மதியம் 1.00 வரை பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 வரை (2838)

குரு
**076 069 1105/ 076 298 1105**


# மகிந்தவின் பாதுகாப்பு நீக்கம் நீதிமன்றம் செல்லத் தீர்மானம்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு நீக்கப்பட்டது தொடர்பில் நீதிமன்றத்திற்கு செல்வதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய செயற்குழு உறுப்பினர் சட்டத்தரணி ரவீந்திர ஜயசிங்க தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பிற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களை நீக்கினால் அது அவசியம் என்று திருப்தியடைய முடியும் எனவும் பொருளாதார காரணங்களுக்காக முப்படையினரையும் நீக்குவதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திருமதி நிலாந்தி கோட்டஹச்சி, சட்டத்தரணி என்ற வகையில் கூறியுள்ள கருத்து ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல எனவும் தெரிவித்த ரவீந்திர ஜயசிங்க, உகண்டா அறிக்கை போன்று இதுவும் மக்களை தவறாக வழிநடத்தும் என்றும் தெரிவித்துள்ளார். (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-1893)

**076 825 7716** (ஆகாஸ்)

## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் உரும்பிராயில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. இரண்டு பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்**

- 18 அடிப் பாதையுடன், நன்னீரூற்று
- உரும்பிராய்ச் சந்தியிலிருந்து 500 m தூரம்
- உரும்பிராய்ச் சந்தியிலிருந்து கோப்பாய் செல்லும் பிரதான காபற் வீதியிலிருந்து 50 m தூரம்
- பார்வையிடும் நேரம் காலை 8.00 முதல் மதியம் 1.00 வரை பிற்பகல் 3.00 முதல் பிற்பகல் 6.00 வரை. (2838)

குரு **076 017 1105**

## நம்பினால் நம்புங்கள்

அதிசயம் ஆனால் உண்மை உங்கள் எதிர்கால வாழ்க்கை துல்லியமாக (காண்டம்) கணித்துத் தரப்படும். ஜனன ஜாதகம் எழுதித் தரப்படும்.

### காயத்திரி திருமண சேவை

கன்னாதிட்டி சிவன் கோயில் முன்பாக
ரூபி விலாஸ் (2833)

**075 353 1367, 077 844 9861**

## யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில்

**13.12.2024 முதல்**
**01.01.2025 வரை**

## இந்தியன் செலக்‌ஷனின்



**நத்தார் மற்றும் புதுவருட ஜவுளிக் கொண்டாட்டம்**

SPECIAL OFFER

சாறி Offer விசேட விலைக்கழிவு

~~1500/=~~ → 1000/=
~~3000/=~~ → 2000/=
~~3500/=~~ → 2500/=
~~4000/=~~ → 2800/=
~~6000/=~~ → 4000/=

நூற்றுக்கணக்கான டிசைன்களில் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், லெஹங்கா, டொப், பார்ட்டி புறெக் என ஏராளமான ஆடைத் தெரிவுகள்

**இம்முறையும் நத்தார், புதுவருடத்தை இந்தியன் செலக்‌ஷனுடன் கொண்டாடுங்கள்**

காலம் : 13.12.2024 முதல் 01.01.2025 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

(வாரத்தின் 07 நாட்களும் திறந்திருக்கும்) (2839)

## NEWTON, NALLUR

**தரம் 6 [2025]**
ஆங்கில, தமிழ் மொழி மூல வகுப்புகள்

ஆரம்பம் 28.12.2024
சனிக்கிழமை 8.00 am

- தமிழ்
- கணிதம்
- விஞ்ஞானம்
- ஆங்கிலம்
- வரலாறு
- புவியியல்
- குடியுரிமை
- சுகாதாரம்
- ICT
- சிங்களம் (2834)

18/18, வைமன் வீதி, நல்லூர்
TCT Supermarket அருகில்
**077 792 3653**

## தரம் 6

ENGLISH & MATHS GROUP CLASSES
By : P.MATHAN

ஆரம்பம் : 28.12.2024
சனிக்கிழமை 8.00am (2834)
18/18, Wyman Road, Nallur.
**077 792 3653**

## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோகட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம். வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள். (674)

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்
48/=
~~80/=~~
**077 773 0900**

## காணி விற்பனைக்குண்டு

**யாழ்ப்பாணம் அச்சுவேலி சன்னதி வீதி வீரபத்திரர் றோட்டில் 5 ½ பரப்புக்காணி 1 ½ பரப்பாகப் பிரித்த நிலையில் விற்பனைக்குண்டு.**

- நிலப்பரப்பு
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி (2838)

**077 288 0152**
**077 468 3354**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாப[illegible] இல.01, [illegible] யாழ்ப்பாணம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org